வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 17.08.2023 வியாழக்கிழமை | இதழ் : 250 | பக்கங்கள் : 16

# ‘13’ஐ அகற்றுவதனால் ஏற்படப்போகும் விளைவை நீங்களே எதிர்கொள்ளுங்கள்

## விமல் அணியை கழந்தார் மனோ கணேசன்

கொழும்பு, ஒகஸ்ட் 17

“மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் பற்றி பேசினார். இப்போது ரணில் விக்கிரமசிங்க 13 மைனஸ் பற்றிப் பேசுகின்றார். நீர் 13 மைனஸும் கொடுக்கக்கூடாது என்கிறீர். இதன்மூலம் இந்த நாட்டு தமிழருக்கு நீர் தரும் செய்தி என்ன? நீர் கூறுவதை கேட்டுக்கொண்டு, கொடுப்பதை சாப்பிட்டுக்கொண்டு வாயை மூடிக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீரா? அது ஒருபோதும் நடக்காது. அதைவிட 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை உமது கட்சி பாராளுமன்றத்தில் கொண்டு வரட்டும். அதை பாராளுமன்றம் எப்படி எதிர்கொள்கின்றது என்பதை உலகம் அறியட்டும். அதன் பின்வருகின்ற விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ளுங்கள்.”

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், விமல் வீரவன்ஸ எம்.பி. தலைமையிலான உத்தர லங்கா சபாகய கட்சியின் எம்.பி. கெவிந்து குமாரதுங்கவை நோக்கித் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், எம்.பிக்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலைமையிலான கட்சிகள் கூட்டாக அமைத்துள்ள உத்தர லங்கா சபாகய கட்சியின் எம்.பி. கெவிந்து குமாரதுங்கவிடம் மேலும் கூறியதாவது:-



நான், பிரிபடாத இலங்கைக்குள்ளே நியாயமான தீர்வைத் தேடுகின்றேன். அதுவே எங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கொள்கை. நீங்கள் எந்தவொரு தீர்வுக்கும் தயார் இல்லை. அதுதான் உங்கள் கொள்கை. அப்படியானால் உங்களுக்கு நான் ஓர் ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

இந்த பிளஸ், மைனஸ் வெட்டிப் பேச்சுகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, உங்கள் கட்சியின் சார்பாக, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில்

11

## கருக்குழாய் வெடித்து பெண் பலி

வடமராட்சி, ஒக.17

கருக்குழாய் (பலோப்பியன் குழாய்) வெடித்து இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் புலோலி தெற்கு காந்தியூரைச் சேர்ந்த அனுஷன் துளசி (வயது-30) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். இவர் மன்னார் மாவட்டத்தில் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

11

## வன்முறையை தூண்டுவோருக்கு சிறை வாழ்க்கையே பரிசாகும்!

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக. 17

மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துகளை அள்ளி வீசி அரசியல் செய்பவர்களுக்குச் சிறை வாழ்க்கைதான் பரிசாகக் கிடைக்கும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் சட்டத்தை மீறி அரசியல்வாதி உள்ளிட்ட எவரும் செயல்பட முடியாது. சட்டங்களைச் சவாலுக்குட்படுத்தி எவரும் கருத்துக்களையும் வெளியிட முடியாது.

இன வன்முறையை - மத வன்முறையைத் தூண்டும் வகையில் எவரும் செயல்படவும் முடியாது. சிலர் சட்டத்தை மதிக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயல்படுகின்றார்கள். அவர்களுக்குச் சிறை வாழ்க்கை தான் பரிசாகக் கிடைக்கும்.” - என்றார். (ஐ)



பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழா நேற்று ஆரம்பமானபோது வேல்பெருமான் எழுந்தருளிய திருக்காட்சி...! படம்: சி. தில்லைநாதன்

## தாயக பாடகர் செல்லத்துரை காலமானார்



யாழ்ப்பாணம், ஒக. 17

“பூத்தகொடி பூக்களின்றி தவிக்கிறது...”, என்ற பாடல் மூலம் பிரபலமான தாயகப் பாடகரும் உணர்வாளருமான சங்கீத கலாபூஷணம் செல்லத்துரை குமாரசாமி (வயது 72) நேற்று காலமானார்.

உடுப்பிட்டியை சேர்ந்தவரான இவர்

11

## எதிர்காலத்தில் இலங்கையில் நீர்ப் பற்றாக்குறை அபாயம்!

### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 17

நிலவும் காலநிலை மாற்றத்தினால் நாட்டில் இன்னும் 20 வருடங்களில் பெரும் நீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன் காரணமாக குறித்த சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு தற்போதிருந்து தயாராக வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நுகேகொடை அனுலா வித்தி

11

## ரணில் களமிறங்குவது நிச்சயம் அவர் ஜனாதிபதியாவதும் உறுதி

### ஹரின் பெர்னாண்டோ நம்பிக்கை

”எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவது நிச்சயம். அவருக்கு நிகர் வேறு எவரும் இல்லை. மூவின மக்களின் அமோக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி கதிரையில் அமர்வது உறுதி.”

-இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

11

## சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கை வருவது உறுதி

கொழும்பு, ஒக. 17

சீன ஆய்வுக் கப்பல் அடுத்த மாதம் நாட்டிற்கு வரவுள்ள நிலையில், இலங்கை மீண்டும் ஒரு பூகோள அரசியல் நெருக்கடியை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் கரிசனையை ஈர்த்துள்ள ஷியான் 6 கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளதை இலங்கை கடற்படை நேற்று பிற்பகல் உறுதிப்படுத்தியது.

இந்த கப்பல் 17 நாட்கள் நாட்டில் தங்கியிருந்து இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக கடற்படை

15

## இப்படியும் நடக்கிறது

ஒரு சோதிடர் ஊர் ஊராக சென்று சோதிடம் பார்த்து கையில் கிடைக்கின்ற பணத்தைப் பெற்றுவந்தார்.

இவ்வாறு ஒவ்வொரு வீடுகளாக ஏறி இறங்கி வந்து கொண்டிருந்தவர் ஒரு வீட்டுக்கு சென்றதும் அந்த வீட்டிலிருந்த ஒரு பெண்ணைப் பார்த்ததும், அவர் கர்ப்பமாக இருப்பதைப் புரிந்துகொண்டார்.

அவருக்கு எந்த நேரத்திலும் குழந்தை கிடைக்கலாம் என்ற நிலை. அவரைப் பார்த்ததும் தெரிந்தது.

அந்தப் பெண்ணுக்கு கைரேகையைப் பார்த்து சோதிடம் சொல்லத் தொடங்கினார். இது உங்களுடைய முதல் பிரசவமா என்று கேட்டார். அந்தப் பெண்ணும் அதற்கு ‘ஆம்’ என்று பதில் சொல்ல, ‘உங்கள் கைரேகைப் படி உங்களுக்கு ஆண் பிள்ளைதான் பிறக்கும், தப்பினால் பெண்பிள்ளை’ என்றாராம்.

இந்தக் கதைதான் அந்தச் செய்தியை பார்த்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

‘சமஷ்டி கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம். இந்த நிலைப்பாட்டில் சமரசம் அல்லது விட்டுக் கொடுப்பு செய்து கொள்ளாமல் -

அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப் படுத்தவும் - நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தவும்’ என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் அனுப்பி வைத்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை தமக்கு தெரிவிக்குமாறு ஜனாதிபதி அண்மையில் கோரியிருந்தார். இதற்கான காலக்கெடு செவ்வாயன்று முடிவடையவிருந்தது. இந்த நிலையிலேயே சம்பந்தன் தமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஐந்து பக்கங்கள் கொண்ட கடிதத்தை வழங்கி வைத்தார். அந்தக் கடிதத்தில் வழக்கம்போல சுதந்திரத்திற்கு பிற்பட்டகால வரலாறுகளை விளக்கியுள்ள அவர், தமிழ் மக்களின் அபிலாசை சமஷ்டிதான் என்றும் அதேவேளை அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும் கேட்டிருக்கிறார்.

பதின்மூன்றை அமுல்படுத்துவது குறித்து பாராளுமன்றில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் நிலைப்பாட்டை தெரிவிக்குமாறே ஜனாதிபதி கோரியிருந்தார். அதாவது அதனை எப்படி அமுல்படுத்த வேண்டும், என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டும் என்பது குறித்தே அவர் கருத்துக்கேட்டிருந்தார். அவர் எந்த சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்னைக்கு தீர்வு பற்றி பேசவில்லை. ஆனால் சம்பந்தன் கடந்த கால வரலாற்றை அவருக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்றால், எப்படி? அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்றால், தற்போது அமுலில் உள்ள அரசியலமைப்பு - அதாவது, ஜே. ஆர். கொண்டு வந்த அசல் அரசியலமைப்பா? அதனை இப்போது முழுமையாக அமுல்படுத்த முடியுமா? இதுவரை கடைசியாக செய்யப்பட்ட இருபத்தியொராவது திருத்தத்தில் உள்ளதும் சேர்ந்ததுதானே இப்போதைய அரசியலமைப்பு. அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்றால் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பாக இருக்காதுதானே?

அதுபோலத்தான், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவது என்றால், அது இன்றிருக்கும் நிலையிலேயே அமுல்படுத்தச் சொல்கிறாரா? அதாவது பதின்மூன்றிலிருந்து பின்னர் பிடுங்கி எடுக்கப்பட்ட விடயங்களை மீண்டும் திருத்தமாக கொண்டுவந்தால் தான் அதனை முழுமையாக அமுல்படுத்த முடியும்.

அவ்வாறெனில் அது எவையெவை, என்ன திருத்தங்கள் மூலம் பதின்மூன்றிலிருந்து சில அதிகாரங்கள் எடுக்கப்பட்டனவோ அவற்றை எல்லாம் பட்டியலிட்டு, அவற்றையெல்லாம் மீண்டும் மாகாணங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற விபரங்களுடன் அல்லவா கேட்க வேண்டும்.

அதைவிடுத்து மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் வழங்கவேண்டும் என்று கேட்பது ஒரு பழமைவாய்ந்த கட்சிக்கு சரியானதுதானா என்று யோசிக்கவேண்டும்.

சில கிராமங்களில் ஒரு பேச்சு வழக்கு உண்டு. வீட்டுக்கு வந்தவர்களை சாப்பிட்டுவிட்டு போங்கள் என்று கேட்கின்றபோது, முழங்கையைப் பிடிப்பது என்று. அதாவது கையை மடித்து வைத்துக்கொண்டு முழங்கையை பிடித்தால் கை வழுக்கிக்கொண்டு போய்விடும். சாப்பிடக் கேட்டதாகவும் போகும். அவர் கையை விடுவித்துக்கொண்டு போயும் விடுவார்.

அதுபோலத்தான் சம்பந்தன் ஐயாவும் ரணிலின் முழங்கையைப் பிடிக்கிறார் போலும்.

**- ஊர்க்குருவி.**

# 2500 ஹெக்ரேயர் வனப்பகுதி மனிதர்களால் எரித்து நாசம்

கொழும்பு, ஓக. 17

வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் மாத்திரம் நாட்டில் சுமார் 2500 ஹெக்ரேயர் வனப் பகுதி மற்றும் புல்வெளிகள் பல்வேறு நபர்களால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாக வனத்துறை பாதுகாப்பு மேலதிக பணிப்பாளர் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த ஜூலை மாதத்தில் சுமார் 150 காடெரிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் இது தொடர்புபட்ட 15 பேர் கடந்த ஜூலை மாதத்துக்குள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் காட்டுத் தீ இல்லை. அனைத்தும் மனிதர்களால் தீ வைக்கப்படுகின்றவை. இந்த ஆண்டில் சுமார் 2000 ஹெக்டேயர் புல்வெளிகள் மற்றும் 500 ஹெக்ரெயர் வனப்பகுதிகளும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. எமக்கு பாதுகாக்க வேண்டி உள்ள வனப்பகுதியின் அளவுடன் ஒரு தீக்குச்சியை எரிய வைத்து செல்லும் ஒருவரை கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதானது அல்ல, நம் நாட்டில் உள்ள பலர் வேடிக்கைக்காக தீ மூட்டுகின்றனர்.

இது கடந்த 2022ஆம் ஆண்டில் சுமார் 350 ஹெக்ரேயர் காணப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த 2021 ஆம் ஆண்டில் இது 514 ஹெக்ரெயராக காணப்பட்டுள்ளது.

கண்டி, நுவரெலியா, பதுளை, மொனராகலை, பொலநறுவை, மாத்தளை , இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் இந்த காட்டுத் தீ பரவல் அண்மைய நாட்களாக அதிகளவில் பரவி வருகிறது.

நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு குறைவதற்கான முக்கிய காரணம் மண் கழுவப்பட்டு செல்வதாகும். அதற்கான முக்கிய காரணம் இவ்வாறு காடழிப்பு இடம்பெறுவதாகும்.

இதன் மூலம் பெரிய நீர் தட்டுப்பாட்டு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளை தடுக்க பொதுமக்களின் உதவியை எதிர்பார்க்கிறோம்-என்றார்.

இதேவேளை, இவ்வாறு மனிதர்களால் காடுகளுக்கு தீ வைக்கப்படுவதற்கு வேடிக்கை , பசுக்களுக்கு புதிய புல் தீவனத்தை வழங்குதல், விவாசாய நடவடிக்கை என்பவையே காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# தலையில் ஏதாவது இருந்திருப்பின் மேர்வின் இப்படி சொல்லமாட்டார்

## சந்திரகுமார் கண்டனம்

கிளிநொச்சி, ஓக. 17

மிக மோசமான யுத்தத்தை கடந்து வந்துள்ள நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் தலையில் எதுவுமில்லாதவர்கள் போன்று மேர்வின் சில்வா கருத்து தெரிவித்திருப்பது கண்டனத்திற்குரியதும் கவலைக்குரியதுமாகும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் விகாரைகள் மீதோ அல்லது பிக்குகள் மீதோ கை வைத்தால் தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு திரும்புவேன் என மக்கள் மத்தியில் வெறுப்பையும் இனகுரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியிருப்பது தலையில் எதுவும் இல்லாதவர்களின் பேச்சு போன்றே அமைந்துள்ளது. இந்த நாட்டில் இன்னும் நிலையான அமைதி நிலாவாமைக்கு ஒவ்வொரு இனத்திற்குள்ளும் மேர்வின் சில்வா போன்றவர்கள் இருப்பதே காரணமாக இருக்கிறது. இவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகள்.

ஒவ்வொரு இனத்துக்குள்ளும் இருக்கின்ற மேர்வின் சில்வா போன்றவர்கள் சமூகத்திலிருந்து அகறப்பட வேண்டியவர்கள். வெறுப்பு பேச்சுக்கள், அப்பாவி மக்களிடம் இனவாதத்தை தூண்டிவிடுகின்ற செயற்பாடுகள், இந்த நாட்டை ஒரு போதும் நிரந்தர அமைதியை நோக்கி கொண்டு செல்லாது.

ஆகவே பொது மக்கள் மேர்வின் சில்வா போன்றோரின் கருத்துக்களுக்கு இடம்கொடுக்காது நிதானமாக சிந்தித்து நாட்டை நிலையான அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் கொண்டு செல்லும் வகையில் செயற்பட வேண்டும் அனைத்து இனங்களுக்கிடையேயும் நல்லிணக்கமும், சமத்துவம் உருவாக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மாணவியை வன்புணர முயன்ற ஆசிரியர் கைது!

கொழும்பு, ஓக. 17

தனது இல்லத்துக்கு மாணவியை அழைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை முடிந்தவுடன் தன்னுடைய இல்லத்துக்கு வருமாறு கடந்த செவ்வாய்க் கிழமை மாணவியை அவர் அழைத்துள்ளார். அவ்வாறே மாணவியும் சென்றுள்ளார். இதன்போதே, ஆசிரியர் மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

அது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவ பரிசோதனைக்காக மாணவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# வைத்தியர்கள் விடுமுறை குறித்து இதுவரையில் தீர்மானம் இல்லை!

கொழும்பு, ஓக. 17

வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்கான விடுமுறையினை வழங்குவது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்காக கோரப்படும் விடுமுறைக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என சுகாதார அமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தகவல் தொடர்பில் கருத்துரைக்கையிலே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையினை கருத்தில் கொண்டு சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முன்னதாக வைத்தியர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 274 வைத்தியர்கள் மற்றும் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், விடுமுறைக்கு அனுமதி வழங்கப்படாமையினால் இந்த வருடம் குறித்த எண்ணிக்கையில் 50 வீதமானவர்கள் கூட வெளிநாடுகளுக்கு செல்லவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருதலைப்பட்சமான தீர்மானங்கள் காரணமாக தற்போது நாட்டிலுள்ள வைத்தியர்களும் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை தோன்றுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே மேலும் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
17.08.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 32

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பிரபாகரன் சர்ச்சைகள்

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மட்டுமல்ல - அந்த அமைப்பின் முக்கிய தளபதிகள் எவருமே உயிருடனில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது. இது தொடர்பில் ஆரம்பத்தில் தடுமாற்றங்களை வெளியிட்டவர்கள்கூட காலப்போக்கில் அமைதியடைந்தனர். பிரபாகரன் இல்லையென்றாலும்கூட, அவர் இல்லையென்பதை முன்வைக்கக்கூடாது. கடவுள் இருக்கின்றாரென்று எவ்வாறு ஒரு பக்தன் நம்புகின்றானோ, அவ்வாறானதோர் அணுகுமுறையில்தான் இந்த விடயத்தை அணுகவேண்டுமென்றே புலம்பெயர் சூழலிலுள்ள ஒரு தரப்பினர் செயல்பட்டனர்.

இவ்வாறானதொரு சூழலில்தான் தமிழ்நாட்டில் வாழும் ஈழ ஆதரவாளர் பழ. நெடுமாறன் இந்த ஆண்டு ஒரு புதிய கதையை கூறினார். பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றும் அவர் தமிழீழ விடுதலைக்கான திட்டத்தை அறிவிப்பார், அவர் விரைவில் வெளிப்படுவாரெனவும் தெரிவித்திருந்தார். கூடவே, அவரின் குடும்பத்துடன் தனக்கு தொடர்பிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதன்போது, நெடுமாறனுடன் காசியானந்தனும் இருந்தார். இதனை எதிர்த்தவர்களோ, புலம்பெயர் சூழலில் பணம் சம்பாதிப்பதற்காக இவ்வாறான முயற்சிகளில் சிலர் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டினர்.

தற்போது, நெடுமாறனின் இரண்டாம் பாகம் அரங்குக்கு வந்திருக்கின்றது. வழமைபோல் இப்போதும் முன்னரைப் போன்றே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இம்முறை, விடயம் சற்று மாறுபட்டதாக இருக்கின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மனைவி மதிவதனியின் சகோதரி - தான் மதிவதனி மற்றும் அவரின் மகளை சந்தித்ததாகவும் அவர்களுடன் உணவருந்தியதாகவும் - அத்துடன் பிரபாகரனும் நலமாக இருக்கிறார் என்றும் கூறும் காணொலி ஒன்று வெளியாகியிருக்கின்றது.

பழ. நெடுமாறன் அமைதியாக இருக்கின்றார். இதனை எதிர்ப்பவர்கள் - முன்னர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களையே மீண்டும் கூறுகின்றனர். இது பணம் சம்பாதிப்பதற்கான ஒரு முயற்சியென்றும் இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை கொச்சைப்படுத்துகின்றனர் என்பதே அவர்களது வாதமாக இருக்கின்றது. ஆனால், இதனை வெறுமனே பணம் சம்பாதிப்பதற்கான முயற்சியென்று கூறிவிட்டு சாதாரணமாக கடந்து செல்ல முடியுமா என்னும் கேள்வியும் உண்டு.

ஜனாதிபதி தேர்தலொன்றை நாடு எதிர்கொண்டுள்ள சூழலிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என அவரது சகோதரி கூறுகின்றார்.

ராஜபக்ஷ குடும்பம் யுத்த வெற்றியை முன்வைத்தே தங்கள் அதிகாரத்தைக் கட்டியெழுப்பியது. சிங்கள மக்களுக்கு உருப்படியாக சொல்வதற்கு எதுவுமில்லாத சூழலிலேயே அவர்களுக்கு யுத்த வெற்றிவாதம் தேவைப்பட்டது. முன்னரைப் போல் யுத்த வெற்றிவாதத்தை முன்வைத்து, அரசியலை முன்னெடுக்கக்கூடிய நிலைமை தென்னிலங்கையில் தற்போதில்லை. அவ்வாறானதொரு சவாலை வழங்கக்கூடிய நிலையில் ஈழத் தமிழ் அரசியல் தரப்புகளும் இல்லை.

மறுபுறம், விடுதலைப் புலிகளின் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் தங்களின் சுயநல அரசியலுக்கு தமிழ் தேசிய தரப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறானதொரு சூழலிலேயே பிரபாகரன் தொடர்பான சர்ச்சைகள் அவ்வப்போது வெளிவருகின்றன. இப்போது புதிதாக, அவரின் குடும்பம் தொடர்பான சர்ச்சையொன்று வெளிவந்திருக்கின்றது. இதன் உண்மைத்தன்மை தொடர்பில் அரசியல் தரப்புகளும் சரி, சாதாரண மக்களும் சரி, கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால், இது வெறுமனே சாதாரண மக்களோடும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளோடும் மட்டுப்பட்ட ஒன்றல்ல. இதன் பரிமாணம் எல்லையற்றது. இங்கு விடயம் உண்மை பற்றியதல்ல - மாறாக, அதன் பயன்பாட்டின் தன்மை தொடர்பானது.

# நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் கதிரியக்க பரிசோதனை நிறுத்தப்படும் அபாயம்

கொழும்பு, ஓக. 17

நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறை காரணமாக சி.ரி., எம்.ஆர்.ஐ. பி.ஈ.ரி. ஆகிய பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இரத்தினபுரி , காலி , பதுளை , கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் பாரிய அபாய நிலை காணப்படுவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் தர்மகீர்த்தி ஆபா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“ நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வருகிறது.

விஷேடமாக , சி.ரி. , எம்.ஆர்.ஐ., பி.ஈ.ரி. பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் பணி புரியும் அதிகாரிகள் ஓய்வு பெற்று வரும் காரணத்தினால், எதிர்வரும் நாட்களில் குறித்த பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம் உள்ளது.

அதன்போது, இரத்தினபுரி, காலி, பதுளை, இலங்கை தேசிய வைத்தியசாலையில் சி.ரி., எம்.ஆர்.ஐ. , பி.ஈ.ரி. பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம் உள்ளது.

இதேவேளை, அதிகாரிகளின் பணி ஓய்வும் வெளிநாடுகளுக்கு செல்வதும் இடம்பெற்று வரும் நிலையில், எதிர்காலத்தில் கதிரியக்க சேவையானது கடும் நெருக்கடியை எதிர்கொள்ளும். இதற்கு விரைவான நடவடிக்கையாக ஆட்சேர்ப்பு மற்றும் தற்காலிகமாக வேனும் ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 63 வரையில் நீட்டிக்குமாறு பரிந்துரைக்கின்றோம்.

எதிர்வரும் மாதத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பி.ஈ.ரி. ஸ்கான் இயந்திரம் நிறுத்தப்படும்.

எம்மால் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. இந்த அதிகாரிகள் ஓய்வு பெற்ற பின்னர் குறித்த பிரிவில் இரு அதிகாரிகள் மாத்திரமே உள்ளனர். அதில் ஒருவர் ஓய்வு பெறுகிறார் மற்றுமொருவர் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் ஓய்வு பெறுகிறார். அதன்படி, எதிர்வரும் மாதத்திலிருந்து இதனை ஒரு அதிகாரியால் மாத்திரம் செய்யக்கூடிய பணி அல்ல. இதற்கு மூன்று பேர் அவசியம். எனினும் தற்போது இருவர் இதில் பணி புரிந்து வருகின்றனர்.

இவர்கள் இருவரும் ஓய்வு பெற்ற பின்னர் தேசிய வைத்தியசாலையின் பி.ஈ.ரி பிரிவை மூட வேண்டிய நிலை ஏற்படும்.

அந்த வகையில், தேசிய வைத்தியசாலை ஆரம்பித்த நாள் முதல் சுமார் 1000 பி.ஈ.ரி. பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு குறித்த சேவைகள் முடங்குவதால் புற்று நோயாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும்-என்றார். (அ)

# வவுனியாவில் வறட்சியால் 450 குடும்பங்கள் பாதிப்பு!

வவுனியா, ஓக. 17

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 450 குடும்பங்களை சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ஏ.எம்.ரூவான் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நிலவும் வரட்சி நிலைமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


தற்போது வவுனியா மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியுடன் கூடிய கால நிலை காரணமாக இதுவரை 450 குடும்பங்களைச் சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில், அதிகமாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெடிவைத்தகல் கிராமத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவர்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுவதனால் குடிநீர் விநியோகத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் குடிதண்ணீர் வழங்கப்படும்-என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 17 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 32
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்** முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்ப்புகள் விலகும் நாள்.

**இடபம்** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்** கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**சிம்மம்** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். புது முதலீடு செய்யலாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி** உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**துலாம்** மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்** மன மகிழ்ச்சியுடன் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளால் உங்களுக்கு உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு** சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மகரம்** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**கும்பம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்** குடும்ப வருமானத்தை உயர்த்த நீங்கள் முற்படுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும்.

# பிரபாகரன், கருணாநிதியை எப்போதும் சமமாக நேசித்தேன்!

## ம. தி. மு. கவின் வைகோ தெரிவிப்பு

மதுரை, ஒக. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தி.மு.கவின் முன்னாள் தலைவர் கலைஞர் கருணாநிதியையும் நான் எப்போதும் சமமாக நேசித்தேன் என ம.தி.மு.க கட்சியின் பொது செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரையில் கட்சி உறுப்பினர்களை சந்தித்து பேசிய அவர் இவ்வாறு கூறினார். மேலும், "நியூட்ரினோ திட்டம், முல்லைப் பெரியாறு, ஸ்டெர்லைட் எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு மக்களுக்காக ம. தி. மு. க. குரல்கொடுத்திருந்தது.

"நானும் பல்வேறு போராட்டங்கள், மக்கள் பிரச்னைகளை தீர்க்க ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் பயணம் செய்துள்ளேன். இந்த பயணத்தின் போது நான் ஒருபோதும் அதிநவீன அறைகள் அல்லது வாகனங்களை ஆடம்பரமாக எடுத்துக் கொண்டதில்லை" என்று கூறினார்.

தமிழ் மக்களின் நலன் கருதி தி. மு. கவுடன் நட்பு கொண்டிருந்தேன். இலங்கை தமிழர்களின் உரிமைக்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நட்புகொண்டிருந்தேன். தி.மு.க.வின் முன்னாள் தலைவர் கலைஞர் கருணாநிதியையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நான் எப்போதும் சமமாகவே நேசித்தேன்.

படகில் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்தபோது, இந்த சந்திப்புக்கும் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தெரிவித்து தி.மு.க கட்சியினர் அறிக்கை வெளியிட்டனர்.

இதன்பின் என்னை கட்டாயப்படுத்தி பிரபாகரன் அனுப்பினார். அப்போது ஒரு கடிதம் ஒன்றை கலைஞருக்கு கொடுக்குமாறு கூறி அனுப்பிவைத்தார்.

கடிதத்தை கலைஞரிடம் கொடுத்தபோது, என்னதான் பற்று இருந்தாலும் உயிரை வெறுத்து சென்றிருக்கக்கூடாது. விடுதலைப் புலிகளை ஆதரித்தால் ஓராண்டு சிறை சென்றேன். இன்னும் ஓராண்டில் அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது. அப்படியே தண்டனை வந்தாலும் ஏற்க தயாராகி உள்ளேன்.

எவ்வாறாயினும், தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டேன், தொண்டர்கள் ஐவர் தீக்குளித்தனர். பின்னர் தொண்டர்களின் விருப்பத்திற்கு அமைய ம. தி. மு. க. உருவாக்கப்பட்டதாகவும் வைகோ சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது கட்சியின் சார்பில் பல்வேறு பிரச்னைகளுக்காக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும், தமது கட்சி குறித்து தமிழகத்தில் விமர்சனங்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# நீட் பரீட்சையை இரத்து செய்யக் கோரி தமிழகம் முழுவதும் தி. மு. க. போராட்டம்!

## -20ஆம் திகதி நடத்துகிறது -

சென்னை, ஒக. 17

"நீட் பரீட்சையை இரத்து செய்யாத மத்திய அரசு மற்றும் பொறுப்பற்ற தமிழக ஆளுநரைக் கண்டித்து திமுக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி சார்பில், தமிழகம் முழுவதும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும்" என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள தி. மு. கவின் கூட்டறிக்கையில், "தமிழக மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து, அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க் கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை இரத்து செய்யாத ஒன்றிய அரசையும் பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து தி. மு. க. தலைவரும், தமிழக முதல்வரின் அறிவுறுத்தலின்படி, திமுக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி சார்பில், தமிழகம் முழுவதும், எதிர்வரும் 20ஆம் திகதி அன்று அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை நடத்தவுள்ளோம்.

இந்தப் போராட்டத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி செயலாளர்கள் சென்னையில் நடக்கின்ற உண்ணாவிரத அறப்போரில் பங்கேற்கவுள்ளனர். அதேபோல, தமிழகத்தில் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரத அறப்போரில் அனைத்துத் தரப்பினரும் திரளாகப் பங்கேற்க அழைக்கின்றோம். நீட் தேர்வை ஒழித்து, தமிழக மாணவர்களின் கல்வி உரிமையும், விலைமதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்" - என்றுள்ளது. (ஐ)

# சாதி, மதப் பிரச்னைகளை தடுக்க தனி உளவுப் பிரிவு

## திருமாவளவன் வலியுறுத்து



சென்னை, ஒக. 17

சாதி, மத பிரச்னைகளை தடுக்க தனி உளவுப்பிரிவு தொடங்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

நாங்குநேரியில் பாடசாலை மாணவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகி நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 12ஆம் வகுப்பு மாணவன் சின்னத்துரையை திருமாவளவன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "மாணவன் உடலில் 21 இடங்களில் வெட்டு காயங்கள் இருக்கின்றன. மேலும் சில நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் இருக்க வேண்டும். இருவரும் விரைவில் வீடு திரும்புவார்கள். பள்ளி மாணவர்களிடம் நச்சுகளை பரப்புவது புதிதல்ல.

ஆர். எஸ். எஸ், சன் பரிவார அமைப்புகள் நாடு முழுவதும் இந்த வேலையை செய்து வருகின்றனர். இது போன்ற சக்திகளால் இளம் தலைமுறைகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மாணவர்களை நச்சுகளை பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த குடும்பத்தை முதலமைச்சர் ஸ்டாலின் பாதுகாக்க வேண்டும். அரசின் சார்பில் வீடு ஒன்றை வழங்க வேண்டும். நாங்குநேரியை வன்கொடுமை பகுதியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே எழுந்துள்ளது. சாதியின் பெயரால் நெல்லை, தூத்துக்குடி வட்டாரத்தில் இந்த கொடுமை தொடர்ந்து வருகிறது. சாதி, மத பிரச்னைகளைத் தடுக்க தனி உளவுப்பிரிவு தொடங்க வேண்டும்" - என்றார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவுக்கு எதிராக மனுஷ, ஹரின் மனு தாக்கல்

கொழும்பு, ஓக. 17

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தமது கட்சி உறுப்புரிமைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட 9 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இரண்டு அமைச்சர்களும் பின்னர் அரசாங்கத்துக்கு ஆதரவளித்ததாக நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

2022 மே மாதம் முதல் ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளரிடம் இருந்து கட்சி தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறி பல கடிதங்கள் வந்ததாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு, கட்சியின் அரசியலமைப்பிற்கு உட்பட்டு நியமிக்கப்படவில்லை எனவும், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது உறுப்புரிமையை ரத்துச் செய்ததமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முறைப்பாட்டிலேயே இந்த உண்மை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கோ அல்லது பொதுச் செயலாளருக்கோ அதிகாரம் இல்லை என மனுதாரர்களான ஹரின் பெர்னாடோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்சியின் ஒழுக்கத்தை மீறியதற்காக குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து, அவர்களின் கட்சி உறுப்பினர் பதவி நீக்கப்பட்டதாக கட்சி பொதுச் செயலாளரிடமிருந்து கடிதங்கள் கிடைத்ததாகவும், பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தங்கள் பாராளுமன்ற ஆசனங்களை இழக்கமாட்டோம் என்று உத்தரவிட வேண்டுமென் றும் உயர் நீதிமன்றத்தில் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (அ)

# 50 ஆயிரம் வயல் நிலங்கள் வறட்சியால் கடும் பாதிப்பு

கொழும்பு, ஓக. 17

வறட்சியான வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் சுமார் 50,000 வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் 46,000 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் 11,333 விவசாயிகளின் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வறட்சியினால் நாடளாவிய ரீதியில் நெற்பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிச் சபை இதற்கான பணிகளை மேற்கொள்கின்றது.

சிறுபோகத்தில் 06 இலட்சம் ஹெக்ரேயருக்கும் அதிக காணியில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அழிவடைந்த நெற்பயிர்களுக்காக ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இழப்பீட்டை அதிகரிப்பதற்கான யோசனைகளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார். (அ)

# விசேட வைத்திய நிபுணர்கள் வெளிநாட்டுக்கு செல்ல தடை!

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஓக. 17

**மயக்கவியல் நிபுணர்கள் உள்ளிட்ட தற்போது இருக்கும் குறைந்த எண்ணிக்கையிலான விசேட வைத்திய நிபுணர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான விடுமுறையை வழங்காதிருக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.**

சுகாதார சேவையில் கடுமையான வைத்தியர் பற்றாக்குறை நிலவும் பல பகுதிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்தார்.

அமைச்சுக்கு அறிவிக்காமல் வெளிநாடு செல்வார்களாயின், அவர்களை பணி நீக்கம் செய்து தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என செயலாளர் குறிப்பிட்டார்.

நாட்டில் குறிப்பிட்ட சில துறைகளில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறான வைத்தியர்களின் புலம்பெயர்வினால் நாட்டின் சுகாதார சேவையில் நெருக்கடி நிலை ஏற்பட்டது.

600இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் விசேட பயிற்சிக்காக தற்போது வெளிநாடு சென்றுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் சுமார் 300 பேர் இந்த ஆண்டு நாட்டுக்கு வரவிருக்கின்றனர்.

அவர்களின் வருகையின் பின்னர் தற்போது ஒவ்வொரு துறையிலும் தற்போது நிலவும் நிபுணத்துவம் பெற்றவர்களின் பற்றாக்குறை ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்படும் என செயலாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வருட காலத்திற்குள் 274 வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

குறித்த காலப் பகுதிக்குள் விசேட தரங்களைச் சேர்ந்த 842 வைத்திய அதிகாரிகளும் நாட்டிலிருந்து சென்றுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# துமிந்த நாகமுவவுக்கு எதிராக அமைச்சர் டிரான் முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 17

முன்னிலை சோசலிச கட்சியின் செயல்பாட்டாளர் துமிந்த நாகமுவவிற்கு எதிராக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார்.

ஜே.வி.பி மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளிட்டோர் தொடர்பில் துமிந்த நாகமுவ வெளியிட்ட கருத்து தொடர்பில் இந்த முறைப்பாடு முன் வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் ஜே.விபியினர் ஐரோப்பாவில் உள்ள தீவு ஒன்றில் வெளிநாட்டுக் கணக்கைப் பேணுவதாக கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து துமிந்த நாகமுவ தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி பொது மக்கள் அமைச்சர் பாதுகாப்பு அமைச்சர் முறைப்பாடளித்துள்ளார். பாகுபாடு இன்றி அனைவருக்கும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என தாம் குறிப்பிடுவதாகவும் இந்த வழக்குக்கும் அது பொருந்தும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இடைநிறுத்தப்பட்ட நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 17

பொருளாதார நெருக்கடியின் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சகல பாரியளவான நிர்மாணப் பணிகளையும் மீள ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இடைநிறுத்தப் பட்டுள்ள வற்றில் முன்னுரிமையின் அடிப்படையில் மீள ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சத்யானந்த தெரிவித்தார்.

கொழும்பு நகரில் மாத்திரம் 10 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

3 பாரிய வாகன நிறுத்துமிடங்களின் நிர்மாணப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

அதற்காக முதலீடு செய்துள்ள மற்றும் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து நிர்மாணப் பணிகளையும் மீள ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

ரூபாவுக்கு நிகராக டொலரின் பெறுமதி வலுவடைந்தமை மற்றும் மூலப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் செலவினங்கள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டு, நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 6 மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஓக. 17

உணவு ஒவ்வாமை காரணமாக சுகயீனமுற்ற ஆறு பாடசாலை மாணவர்கள் பசறை வைத்தியசாலையில் சேரக்கப்பட்டுள்ளனர்.

பசறை மீதம்பிட்டியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை பாடசாலை மதிய இடைவேளையின் போது குறித்த மாணவர்களில் ஒரு மாணவன் வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவை ஆறு பேரும் பகிர்ந்து உண்டபோது அவர்களுக்கு ஒவ்வாமை காரணமாக வயிற்று வலி மற்றும் வாந்தி ஏற்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து ஆறு மாணவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

# ரணில்-சஜித் இருவரும் சங்கமிக்க வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் யோசனை



கொழும்பு, ஓக. 17

ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் இணைந்து பயணிக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோகினி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

குறைந்தபட்சம் 25 வருடங்களை இலக்காகக் கொண்ட தேசிய வேலைத்திட்டத்திற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவெனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காகவும் மக்களின் எதிர்காலத்திற்காகவும் ரணில்-சஜித் ஒன்றிணைந்து செல்லவேண்டும் என்றும் அது நாட்டின் எதிர்காலத்திற்கான தேசிய தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# தொழில் வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுக்கவேண்டும்!

## பல்கலை விரிவுரையாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 17

**வைத்தியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்வதனால் ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்தநிலையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறுமாயின் எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படும் தொழில் வல்லுநர்களின் வெற்றிடத்தை நிரப்ப முடியாத பிரச்சினையை எதிர்நோக்க நேரிடும் என அந்த சங்கத்தின் பேச்சாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்தார்.

தற்போது விதிக்கப்படுகின்ற வரி கட்டணத்துக்கு அமைய, வைத்தியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோர் வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டிலிருந்து வெளியேறுபவர்களை விமான நிலையத்தில் வைத்துத் தடுப்பதை விடுத்து பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வைத்தியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் இலங்கையின் வளம் இல்லாமல் போவதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் சாருதத்த இளங்கசிங்க மேலும் கூறினார். (அ)

# தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் பிரதம பாதுகாப்பு அதிகாரி உயிரிழப்பு

## மின் கம்பம் முறிந்து விழுந்தமையால்

கொழும்பு, ஓக. 17

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் இடம்பெற்ற விபத்தில் அதன் பிரதான பாதுகாப்பு அதிகாரி உயிரிழந்துள்ளார்.

54 வயதான உபுல் செனரத் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு அருகில் அமைந்துள்ள மிருக வைத்தியசாலையை அண்மித்து நேற்று முன்தினம் இந்த அனர்த்தம் பதிவாகியுள்ளது.

மிருக வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளதுடன், அந்த மரம் மின் கம்பத்தில் சாய்ந்தமையினால் மின் கம்பமும் முறிந்துள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அதனருகில் சென்றுகொண்டிருந்த தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரி மீது மின் கம்பம் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் கடுமையான காயங்களுக்குள்ளான பிரதான பாதுகாப்பு அதிகாரி, களுபோவிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (அ)

# இலங்கைக்கு விமான சேவையை அதிகரிக்கவுள்ளது ஏரோபுளொட்

கொழும்பு, ஓக. 17

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான விமான சேவையை அதிகரிப்பதை ரஷ்ய விமான சேவையான ஏரோபுளொட் உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி, ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கான விமான சேவையை செப்டம்பர் மாதம் 09ஆம் திகதியில் இருந்து வாராந்தம் 3 தடவைகள் இயக்குவதற்கு ஏரோபுளொட் விமான சேவை தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய மேலதிக சேவைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

புதிய விமான சேவைகளுக்கு அமைய இலங்கையில் இருந்து ரஷ்யாவின் மொஸ்கோவுக்கு வியாழன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விமான சேவைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ரஷ்யாவின் மொஸ்கோவில் இருந்து வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இலங்கைக்கான விமான சேவைகள் இடம்பெறும் என ஏரோபுளொட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மாலைதீவுக்கான விமான சேவைகளின் எண்ணிக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிப்பதற்கு ஏரோபுளொட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ரஷ்யாவில் இருந்து எஸ்.யு.320 மற்றும் எஸ்.யு.321 ரக விமானங்களை வாராந்தம் 7 தடவைகள் மாலைதீவுக்கு இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொதுப்போக்குவரத்து வாகனங்களை சுங்கத்தில் இருந்து விடுவிக்க அனுமதி!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

இறக்குமதி தடைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டு சுங்கத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுப் போக்குவரத்து வகையைச் சேர்ந்த வாகனங்களையும் விடுவிக்க அனுமதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



பொது போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் பஸ்கள், பாரவூர்திகள், கொள்கலன் ஊர்திகள் மற்றும் விசேட தேவைகளுக்கான பஸ்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் குறித்த வாகனங்களை விடுவிக்க முடியும் என அவர் கூறினார்.

சுங்கப் பத்திரம் வழங்கப்படாத வாகனங்களை, சி.ஐ.எவ் என்படும் சரக்கு மற்றும் காப்புறுதிச் செலவுக்கான பெறுமதியில் 30 சதவீதத்தை மேலதிகமாக செலுத்தி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அறிக்கை அளித்ததன் பின்னர் விடுவிக்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் பஸ்கள், விசேட தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் பாரவூர்திகள் உள்ளிட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு கடந்த 14ஆம் திகதி நள்ளிரவு முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, குப்பைகளை அகற்றும் பாரவூர்திகள், தீயணைப்பு வாகனங்கள் போன்ற விசேட தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கும் இதன் கீழ் அனுமதி வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பஸ்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதன் மூலம் பயணிகள் போக்குவரத்து வசதிகளை வலுப்படுத்துவதுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார். (அ)

# பாடசாலை வளாகத்தில் நுழைந்த காட்டுயானை



வவுனியா, ஓக. 17

வடக்கு மருதொடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்திற்குள் நேற்றுக் காலை காட்டு யானையொன்று புகுந்துள்ளதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து கிராம மக்கள் ஒன்றிணைந்து குறித்த காட்டு யானையைக் காட்டுக்குள் விரட்டியதாகவும், எனினும் குறித்த யானை அக் கிராமத்தினை அண்டிய பகுதியிலேயே தொடர்ந்து சுற்றிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் குறித்த யானையின் காலில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் இது குறித்து வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிகளவில் வருமானத்தை ஈட்டிய கோதுமை மா விநியோகஸ்தர்கள்!

கொழும்பு, ஓக. 17

அனுமதியற்ற கோதுமை மா இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்த தடையைத் தொடர்ந்து உள்ளூர் கோதுமை மா விநியோகஸ்தர்கள், பில்லியன் கணக்கான ரூபாயில் கணிசமான வருமானத்தை ஈட்டியதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அண்மைய கூட்டத்தின்போது வெளிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் இரண்டு நிறுவனங்களும் பெற்றதாகக் கூறப்படும் இலாபங்களின் துல்லியமான அளவைக் கோடிட்டுக் காட்டும் விரிவான அறிக்கையை எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாக சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, உள்நாட்டு கைத்தொழில்களை பாதுகாக்கவும் அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்கவும் இறக்குமதி தடையை நிதிய மைச்சு அறிமுகப்படுத்தியதாக தெரிவித்தார்.

அத்துடன் குறித்த இரண்டு நிறுவனங்களும் உயர்ந்த இலாப விகிதத்துடன் இயங்குவதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

கோதுமை மா கிலோ ஒன்றுக்கு 35 ரூபாய் வரியுடன் இறக்குமதி செய்தபோதும், அது கிலோ 160 ரூபாய்க்கு விற்கப்படுவது அவதானிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவில் நெற்பயிர் சேதம்

கொழும்பு, ஓக. 17

வறட்சி காரணமாக குருநாகல் மாவட்டத்திலேயே அதிக நெற்பயிர் சேதமடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியாக நிலவும் வறட்சி காரணமாக நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்களை மதிப்பிடுவதற்காக 25 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

குறித்த குழுக்களின் தரவுகளுக்கு அமைய குருநாகல் மாவட்டத்தில் 19 ஆயிரத்து 388 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர் செய்கை சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அந்த மாவட்டத்தில் 22 ஆயிரத்து 357 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு மத்திய வங்கியே காரணம்!

## கானா நாட்டு பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 17

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையின் மத்திய வங்கியே காரணம் என கானா பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஓசி கியே- மென்சா போன்சு தெரிவித்துள்ளார்.**

**கானா மத்திய வங்கி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்துரைத்தபோதே அவர் இலங்கை மத்திய வங்கியை விமர்சித்துள்ளார்.**

2022ஆம் நிதியாண்டில் கானாவின் மத்திய வங்கி பாரிய இழப்பை பதிவு செய்தது.

இதன் விளைவாக கானாவின் உள்நாட்டு கடன் பரிமாற்றத்தில் 50 சதவீதத்தை துண்டிப்பதற்கு நேர்ந்தது.

இதனையடுத்து கானா மத்திய வங்கியின் ஆளுநரை பதவி விலகுமாறு அந்த நாட்டு பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ள பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஓசி கியே- மென்சா போன்சு, கானா மத்திய வங்கி நேரடியாக பாராளுமன்றத்துடன் தொடர்புடையது இல்லை என குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன் மத்திய வங்கி நிதியமைச்சருக்கு தங்களது நடவடிக்கைகள் தொடர்பில் தகவல் வழங்க வேண்டும்.

எனவே, மத்திய வங்கியின் பிரச்னையை அரசியலாக்குவது நாட்டுக்கு சிறந்ததில்லை எனவும் கானா பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இதே போன்ற பொருளாதார நெருக்கடி நிலையில் காணப்பட்டபோது இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியவில்லை.

இலங்கையில் தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடி நீடிக்கிறது.

எனவே, தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கிக்கு முடியுமாயின் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என கானா பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஓசி கியே- மென்சா போன்சு தெரிவித்துள்ளார்.

(அ)



# அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அஜித் மெண்டிஸ்

கொழும்பு, ஓக. 17

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வைத்தியர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் நேற்று இவர் நியமிக்கப்பட்டார்.

முன்னாள் தலைவர் சரத் லியனகே பல குற்றச்சாட்டுக்கள் காரணமாக அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ள வைத்தியர் மெண்டிஸ், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 2ஆவது மின்பிறப்பாக்கி மீள இயங்குகிறது

கொழும்பு, ஓக. 17

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாம் மின் பிறப்பாக்கி மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த மின்பிறப்பாக்கி கடந்த 8ஆம் திகதி பழுதடைந்திருந்தது.

இந்தநிலையில் அதன் திருத்தப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு மீளவும் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய தேசிய மின்கட்டமைப்புடன் 270 மொகாவோட் மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நிபந்தனையுடன் ரணிலுக்கு ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் கவனம்

கொழும்பு, ஓக. 17

நிபந்தனைகளின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவாராயின், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஆதரவளிக்கவேண்டுமென கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குறித்த நிபந்தனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளதாகவும், சஜித் பிரேமதாசாவை பிரதமராகும் கோரிக்கையினை முன்வைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையில், பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிப்பார் என்பது வெளிப்படையானது எனவும், இந்த விடயத்தில் புதிய ஒப்பந்தமொன்று அவசியமற்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்த விடயத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சிறப்பு அங்காடியை உடைத்து கொள்ளையிட்ட இருவர் கைது

கொழும்பு, ஓக. 17

கொம்பனித்தெரு பகுதியில் அமைந்துள்ள சிறப்பு அங்காடியொன்றை உடைத்து பொருட்களை கொள்ளையிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறப்பு அங்காடியில் 13 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடனான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தங்கியிருந்த வாடகை அறையிலிருந்து கொள்ளையிடப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

30 மற்றும் 38 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ)

# பரணகமவில் விளையும் திராட்சை

கொழும்பு, ஓக. 17

ஐரோப்பாவில் விளையும் திராட்சை ஊவா பரணகம அத்கண்தவக்க கிராமத்தில் வெற்றிகரமாக பயிரிடப்பட்டுள்ளது.

ஜே.எம்.டபிள்யூ.பண்டாரவுக்குச் சொந்தமான அரை ஏக்கர் காணியில் இந்த திராட்சைத் தோட்டம் அமைந்துள்ளது.

"இஸ்ரேல் ப்ளூ" என்றழைக்கப்படும் திராட்சை வகை அந்த நிலப்பரப்பில் வளர்க்கப்படுகிறது. மற்றும் தற்போது அதிக விளைச்சலை தந்துள்ள குறித்த திராட்சைகள் அதிக சுவை கொண்டு இருப்பதாகவும் உரிமையாளர் தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும் அங்கு சென்று பயிர்ச் செய்கையை பார்வையிட்டுள்ளார்.

இந்நாட்டில் திராட்சை சாகுபடிக்கு யாழ்ப்பாணம் மிகவும் பொருத்தமான பிரதேசம் என இனங்காணப்பட்டுள்ள போதிலும் தற்போது யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படும் இசபெல்லா திராட்சை வகை ஒயின் தயாரிப்பிற்கு மட்டுமே பொருத்தமானது என்ற கருத்தும் நிலவுகிறது.

இஸ்ரேல் புளூ எனப்படும் திராட்சை வகையை பரணகமவில் மாத்திரமன்றி நாட்டின் எந்தப் பகுதியிலும் பயிரிட முடியும் என பண்டார தெரிவித்தார்.

துண்டிக்கப்பட்ட திராட்சைக் கிளைகளைப் பயன்படுத்தி புதிய திராட்சை செடிகள் தயாரிக்கப்படுவதாகவும், அதற்கு அதிக கிராக்கி இருப்பதாகவும் பண்டார குறிப்பிட்டார்.

இலங்கைக்கு திராட்சையை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் சுமார் 900 மில்லியன் டொலர்கள் செலவாகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.





2018ஆம் ஆண்டு இந்த நாட்டில் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வகையிலான திராட்சை வகைகளை தயாரிக்குமாறு விவசாய திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கிய போதிலும் இதுவரை அவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பண்டாரவின் திராட்சை செய்கையை தாம் அவதானித்ததாக தெரிவித்த விவசாய அமைச்சர், இறக்குமதி செய்யப்பட்ட திராட்சைகளை விட அவை அதிக சுவை கொண்டவை எனவும் தெரிவித்தார்.

இந்த திராட்சை பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தினால் எதிர்காலத்தில் திராட்சையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

ஈழநாடு



செ.கார்கி

# தலை குனியும் தமிழ்நாடு:

## சாதி வெறியால் அழியும் மாணவர் சமூகம்

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா', 'கல்தோன்றி மண்தோன்றா...', 'வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு' போன்ற வெற்றுப் பெருமிதங்களில் திளைத்து அகம கிழ்ச்சி அடைந்து, நாம் மண்ணில் சொர்க்கத்தில் வாழ்வ தாக தினம் தினம் கனவு கண்டுகொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தின் முகத்தில் செருப்பைக் கழற்றி அடித்திருக்கின் றது நாங்குநேரியில் தலித் மாணவர் மீது சாதிவெறியர் கள் நடத்திய கொலைவெறித் தாக்குதல்.

தமிழ்நாடு முழுவதும் இரத்த வாடை வீசுகின்றது. இரத்தம் உறைந்த படிக்கட்டுகள் மனதில் இருந்து மறை யாமல் விடிய விடிய சித்ரவதை செய்கின்றது.

பத்து ஆண்டுகள், பனிரெண்டு ஆண்டுகள் கல்விக்கூ டத்தில் படித்த மாணவர்கள் சாதிவெறியோடு அலைகின் றார்கள் என்றால் நாம் யார் மீது குற்றம் சொல்வது?

ஏறக்குறைய 8 மணி நேரங்கள் பள்ளியில் ஆசிரியரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மாணவனுக்கு அங்கே என்ன கற்பிக்கப்படுகின்றது? தன்னுடன் அருகில் அமர்ந்து படிக்கும் மாணவனை சமத்துவமாகப் பார்க்கவும், அவனை தன்னுடைய தோழனாய், சக மனுசனாய் பார்க் கவும் ஆசிரியரோ, இல்லை அந்தக் கல்வி முறையோ கற்றுத் தரவில்லை என்றால், அந்த ஆசிரியரால், கல்வி முறையால் சமூகத்துக்கு என்ன பயன்?

தமிழ் படிப்பதும், ஆங்கிலம் படிப்பதும், கணிதம் படிப்பதும், அறிவியல் படிப்பதும், சமூக அறிவியல் படிப்பதும் ஒரு மாணவனை முழு மனவளர்ச்சி அடைந்த மாணவனாக மாற்றிவிடாது என்பதை ஆசிரியர்களும், அரசும் உணர வேண்டும்.

படிக்கும் மாணவர்களின் மனதில் இருந்து சாதிவெறி வெளியேற்றப்பட்டு, அந்த இடத்தில் மனிதம் நிரப்பப்ப டவில்லை என்பது பெரும் தோல்வியையே காட்டுகின் றது.

ஆசிரியர்கள் மீதும், கல்வித் திட்டத்தின் மீதும் மட் டுமே குறை சொல்லிவிட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாதுதான். சமூகம் முழுவதும் சாதியால் சூழப்பட்டு இருக்கும் போது, அந்த சமூகத்தில் இருந்து வரும் மாண வர்களிடமும் அதன் வெளிப்பாடு இருக்கவே செய்யும்.

சாதிச் சங்கங்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் புற்றீ சல் போல பெருகி இருக்கின்றது. ஒவ்வொரு சாதிக்கும் நூறு சாதிச் சங்கங்கள் இருக்கின்றன. உலகமயமாக்கலால் உருவாக்கப்பட்ட திடீர் பணக்காரப் பொறுக்கிகள் அரசி யலில் பேரம் பேசும் நிலைக்கு தங்களை உயர்த்திக் கொள்ள, தங்களிடம் குவிந்து கிடக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியை வீசி எறிந்து சில அல்லக்கைகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

தான் முறுக்கி விட்டிருக்கும் மீசையில் இருக்கும் மயி ரளவுக்குக் கூட சமூக அக்கறையற்ற இந்தக் கழிசடை கூட்டம் பெரியவர்களை சாதி ரீதியாக அணி திரட்டுவ தோடு, சிறுவர்கள் மனதிலும் சுயசாதிப் பெருமிதங்களை ஊட்டி அப்பட்டமாகவே தலித் விரோதப் போக்கை வளர்த்தெடுக்கின்றன.

இதன் வெளிப்பாடாகத்தான் மாணவர்கள் கைகளில், கழுத்தில், சாதி, சமூக, இனரீதியான அடையாளங்களைக் காட்டும் கயிறுகள், டாலர்கள் போன்றவற்றை அணிகின் றார்கள். மேலும் சாதிவெறியர்களால் அச்சடித்து தரப்ப டும் பனியன்களை அணிகின்றார்கள்.

தொடர்ச்சியாக சாதிவெறி ஊட்டி வளர்க்கப்படும் இந்த இளைஞர்கள், தங்களின் வாழ்க்கை என்பதே தங்க ளுடைய சாதிய அடையாளத்தை காப்பாற்றத்தான் என்று நினைத்து புத்தகங்களுக்குப் பதில் அருவாளைத் தூக்க ஆரம்பித்து விடுகின்றார்கள்.

ஆனால் தங்களைத் தூண்டிவிட்ட தலைவனின் பிள் ளைகள் மிகச் சிறந்த கல்வி நிலையங்களில் உயர் கல்வி பயில்வதைப் பற்றியோ, வெளிநாடுகளில் படிப்பதைப் பற்றியோ, அவர்கள் ஒருபோதும் சாதிக் கயிறை கட்டிக் கொண்டு கையில் அருவாளோடு நிற்பதில்லை என்ப தையோ இவர்கள் கண்டுகொள்வதில்லை. சாதிவெறி அனைத்தையும் மறைத்து ஓர் அடிமையைப்போல இவர்



களை வேலை செய்ய வைக்கின்றது.

சில நாட்களுக்கு முன்னால் அன்புமணி ராமதாஸ் அவர்கள் சாதி மிகவும் அழகானது என்றும், அதன் பண் பாடு காக்கப்பட வேண்டும் என்றும், மதிக்கப்பட வேண் டும் என்றும் திருவாய் மலர்ந்தருளினார். அவர் இப்படி திருவாய் மலர்வது முதல்முறை இல்லை என்றாலும், ஒரு சமூகத்தை தன்னுடைய சொந்த சுயநலத்துக்காக எப்படி சாதிவெறியூட்டி அவர்களை சாதிவெறியர்களாக, வன் முறையாளர்களாக மாற்றுகின்றார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

அன்புமணி ராமதாஸை மட்டும் நாம் குற்றம் சொல்ல வில்லை. ஏறக்குறைய எல்லா சாதியைச் சேர்ந்த சாதிவெ றியர்களும் இதே உத்தியைக் கடைபிடித்தே சாதிவெறியை தூபம் போட்டு வளர்க்கின்றார்கள்.

சுய சாதி வெற்று பெருமிதங்களில் மூழ்கிக் கிடக்கும் பெற்றோர்களும் தங்களின் பிள்ளைகள் இப்படி சாதிவெ றியர்களாக, காலிப் பயல்களாக மாறுவதை ஊக்குவித்தே வருகின்றார்கள்.

அந்த ஊக்கம்தான் இன்று அருவாளை தூக்கிக் கொண்டு போய், தூங்கிக்கொண்டிருந்த அந்த அப்பாவி மாணவ னையும், அவனின் தங்கையையும் சரமாரியாக வெட்டி ரத்த சகதியில் மூழ்கடித்து துடிதுடிக்க வைத்திருக்கின் றது. தடுக்கப் போன வயதான முதியவரைக் கொன்று போட்டிருக்கின்றது.

இந்த சம்பவத்தில் தமிழ்நாடு அரசு உடனே தலையிட்டு கொலைவெறித் தாக்குதல் நடத்திய மாணவர்களைக் கைது செய்திருக்கின்றது. ஆனால் கொலை வெறித் தாக் குதலில் ஈடுபட்ட மாணவர்கள் 18 வயதுக்கும் குறைவா னவர்கள் என்பதால் சிறார் நீதி வாரியத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை



உணர்ந்து குற்றச்செயலில் ஈடுபடும் சிறுவர்களை கைது செய்ய ஏதுவாக 18 வயது என்பதைக் குறைத்து 15 வய தாக மாற்ற வேண்டும். மேலும் இது போன்ற சாதிவெ றித் தாக்குதல் நடத்தும் இளைஞர்களின் பெற்றோரை யும் கைது செய்து, சாகும்வரை சிறையில் அடைப்பதற்கு ஏற்றவாறு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். இல்லை என்றால் இது போன்று சிறுவர்களை ஏவி கொலை செய்து சாதிவெறியர்கள் தங்களின் சாதிவெ றியை தீர்த்துக் கொள்வார்கள்.

கொலைவெறித் தாக்குதலுக்கு ஆளான மாணவருக்கு ஆதரவாக பெரும்பாலான அரசியல் கட்சிகள் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்திருக்கின்றன. தினம் தினம் சாதி யையும் சனாதனத்தையும் பேசி தமிழ்நாட்டில் சாதிவெ றியைக் கொம்பு சீவிவிடும் பிஜேபி உட்பட.

ஆனால் உண்மையில் மனதார இவர்கள் சாதிவெறி யர்களை எதிர்க்கின்றார்களா, சாதிக்கு எதிராக களமாடு கின்றார்களா என்று பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. ஒரு பக்கம் சாதிவெறியர்களோடு தேர்தல் கூட்டணி வைப்பது, சாதிவெறியர்கள் வைத்திருக்கும் கூட்டத்திற்கு ஏற்றார்போல பேரம் பேசுவது போன்றவற்றை கூச்சமோ, குற்ற உணர்வோ இல்லாமல் செய்துவிட்டு, இப்படியான மோசமான சம்பவம் நடந்து பெரும் அதிருப்தியை ஏற்ப டுத்திய பின்னால், தாங்களும் அதைக் கண்டிப்பதாக காட்டிக் கொள்வது இவர்களின் வாடிக்கையாக இருக் கின்றது.

மாணவர்களுக்கு சாதிவெறியூட்டி அவர்களை கொலைகாரர்களாக மாற்றிய சாதிவெறியர்களைக் கண்டிக்காத பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள், இது சமூகநீதிக்கான அரசு என்றும், பாதிக்கப்பட்ட தம்பி சின்னதுரையின் கல்லூரி படிப் பிற்கான முழு செலவையும் அண்ணனாக நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்றும் ஒரு தர்ம பிரபுவைப் போல பேசுகின்றார்.

பிரச்சினையின் தீவிரத்தைப் பற்றிய எந்த உணர்வுமே அவரிடம் இல்லை. இப்போது மட்டுமல்ல, கடந்த ஆண்டு மே மாதம் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அடுத்த பள்ளக்கால் பகுதியில், கையில் சாதிக் கயிறு கட்டும் விவகாரத்தில் மாணவர்களுக்கு இடையே ஏற்



பட்ட மோதலில் ஒரு மாணவர் இறந்த போதும் இதே தொனியில்தான் அவர் பேசினார்.

எல்லோருக்கும் சமத்துவமான அரசாக தங்கள் அர சாங்கம் செயல்படும் என்றும், மாணவர்கள் சாதி மோத லில் ஈடுபடுவது வருத்தம் அளிப்பதாகவும் மாணவர்க ளுக்கு கவுன்சலிங் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் சொன்னார்.

அந்த சம்பவத்திலும் ஈடுபட்டவர்கள் 18 வயதுக்குக் குறைவானவர்கள் என்பதால் கைது செய்யப்பட்ட 3 மாணவர்களும் கூர்நோக்கு இல்லத்தில்தான் அடைக்கப் பட்டார்கள். மேலும் இரண்டு ஆசிரியர்களையும் பணி யிடை நீக்கம் செய்தார்கள்.

இது போன்ற நடவடிக்கைகள் எடுத்து அப்போதைக்கு பிரச்சினையின் மீது தாங்கள் நடவடிக்கை எடுத்தோம் என்று காட்டிக் கொள்வதே அரசுக்குப் போதுமானதாக இருக்கின்றது. ஆனால் இது போதாது.

ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்படும் போதே அவர்கள் சாதிக்கு எதிரான மனநிலை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் பள்ளியில் மாணவர் களிடம் சாதிய பாரபட்சத்தோடு நடந்து கொண்டால் பணி நீக்கம் செய்யப்படுவதோடு, சிறைக்கும் செல்ல நேரிடும் என்பது போன்ற உறுதிமொழிகளில் கையொப் பம் பெற வேண்டும்.

அதே போல மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வரும் போது சாதியைக் குறிக்கும் வகையில் கயிறுகளை அணிந்து வருவதையும், பனியன்கள் அணிந்து வருவதை யும் தடை செய்ய வேண்டும்.

கடந்த அதிமுக ஆட்சியில் 2019ம் தேதி ஜூலை 30ஆம் தேதி மாவட்ட கல்வி அதிகாரிகள், முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை தமிழ்நாடு கல்வித் துறை இயக்குனரால் அனுப்பப்பட்டது. அந்தச் சுற்றறிக் கையில், பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்கள் சாதியைக் குறிக்கும் வகையில் கயிறுகளை அணிந்து வருவதாகவும், 2018ஆம் ஆண்டைச் சேர்ந்த பயிற்சி ஐஏஎஸ் அதிகாரிகள் இதனைப் பார்த்து அரசுக்குத் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

காவி, மஞ்சள், பச்சை வண்ணங்களில் அணியப்படும் இந்தப் பட்டைகள், கயிறுகள், நெற்றியில் வைக்கும் பொட்டு ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் தங்களது சாதியை அடையாளப்படுத்துவதோடு, அவற்றை வைத்து ஒன்று சேர்வதாகவும் கூறப்பட்டிருந்தது.

உடனடியாக தலைமைக் கல்வி அதிகாரிகள் இம்மாதி ரிப் பள்ளிகளைக் கண்டறிந்து, அந்தந்தப் பள்ளித் தலை மையாசிரிகளுக்கு தகுந்த உத்தரவை இடுவதன் மூலம் இந்த நடவடிக்கையைத் தடுக்க வேண்டுமெனக் கூறப்பட் டிருந்தது.

இந்த சுற்றிக்கை ஊடகங்களில் வெளியானதை அடுத்து பா.ஜ.க தலைவர் எச். ராஜா, 'கையில் கயிறு கட் டுவது. நெற்றியில் திலகமிடுவது இந்து மதநம்பிக்கை தொடர்பானது. இவைகளை பள்ளிகளில் தடை செய்வது அப்பட்டமான இந்து விரோத செயலாகும். மாற்றுமத சின்னங்களைத் தடை செய்யும் தைரியம் பள்ளி கல்வித் துறை ஆணையருக்கு வருமா? இந்த ஆணை உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்" என்று தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டார்.

பாஜகவின் எதிர்ப்பை அடுத்து அப்போதைய பள்ளிக் கல்வி அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் நடுங்கிப் போய் "அரசின் கவனத்துக்கு வராமல் இப்படி ஒரு சுற்ற றிக்கை வெளியிடப்பட்டு விட்டதாகவும், இந்த சுற்றறிக் கைக்கு முன்பிருந்த நிலையே தொடரும்" என்றும் தெரி வித்தார்.

இந்த அரசாவது அதை செய்ய வேண்டும் என்பது தான் அனைத்து ஜனநாயக சக்திகளின் விருப்பமாக உள் ளது. சாதி ஆணவப் படுகொலைகளை தடுப்பதற்கான சட்டத்தையே சாதிவெறியர்களுக்குப் பயந்து கொண்டு வராமல் இருக்கும் இந்த அரசு, இதைச் செய்யுமா என்பது கேள்விக்குறிதான்.

# தலைமன்னார் - மாத்தளை நடைபவனியின் பின்புலத்தில் மலையக தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து ஒரு சிந்தனை



கலாநிதி ஜெகான் பெரேரா

பெருமளவுக்கு விளம்பரம் இல்லாமல் இலங்கையின் வடமேற்கு கரையோரத்தில் தலைமன்னாரில் இருந்து தொடங்கிய ஒரு நடைபவனி மலையகத்தில் மாத்தளையைச் சென்றடைந்திருக்கிறது. இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் 200 வருடங்களுக்கு முன்னர் கடந்துவந்த காட்டுப்பாதையின் தடத்தில் இந்த நடைபவனி இடம்பெற்றது. அந்த நீண்ட பயணத்தின் அடையாளபூர்வமான மீள் அரங்கேற்றம் கடந்த இரு வாரங்களாக நடைபெற்றது.

ஆனால், சிரமம் நிறைந்த நடைபவனியில் சொற்ப எண்ணிக்கையானவர்களே தலைமன்னாரில் இருந்து இறுதியில் மாத்தளை வரை தொடர்ந்து வந்தார்கள். அந்த பாதையில் முன்னைய நூற்றாண்டுகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டுபோனார்கள். தென்னிந்தியாவில் இருந்து குழுக்கள் குழுக்களாக- சில குழுக்களில் நாற்பது சதவீதமானவர்கள் இடை வழியில் மரணமடைந்தார்கள்.

நவீன யுகத்தில் அதே மார்க்கத்தில் கடந்த இரு வாரங்களாக நடைபவனியில் வந்தவர்கள் இன்னொரு யுகத்தின் காணாமல்போனோரின் புதைகுழிகளைக் கொண்டிருக்கும் மண்ணையே தங்கள் பாதங்கள் மிதித்துக்கொண்டுவந்தன என்பதை அறிவார்கள். நீண்ட மார்க்கத்தில் பல்வேறு இடங்களில் நடைபவனியில் இணைந்து கொண்டவர்களுக்கு செம்மையாக அமைக்கப்பட்ட வீதிகள், அந்த வீதியோரங்களில் கடைகள், உணவகங்கள் மற்றும் தங்கிச்செல்வதற்கு விடுதிகள் என்று நவீன வசதிகள் எல்லாம் இருந்தன. அவர்களுக்கு பலரின் ஆதரவும் அனுசரணையும் இருந்தது.

பெருந்தோட்டங்களில் தொடர்ந்து வேலைசெய்து கொண்டிருக்கும் மக்களை தற்போதைய பொருளாதார நெருக்கடி இலங்கைச்சமூகத்தின் வேறு எந்த பிரிவினரையும் விட படுமோசமாக பாதித்திருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாகவே நடைபவனி இடம்பெற்றது. ஆயிரம் ரூபா அற்ப வேதனத்துக்கான அவர்களின் போராட்டம் தேசிய பொருளாதாரத்தை கொவிட் பெருந்தொற்று பலவீனப்படுத்துவதற்கு முன்னர் தொடங்கியது.

வைரஸ் பரவுவதை தடுக்க அரசாங்கம் ஊரடங்கை பிறப்பித்தபோதிலும் அது விவசாயத்துறைக்கு பிரயோகிக்கப்படவில்லை. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்துகொண்டேயிருந்தனர். இறுதியில் ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலப் போராட்டத்துக்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா வேதனத்தைப் பெற்றபோது பணவீக்கத்தினால் அதன் உண்மையான பெறுமதி குறைந்துவிட்டது.

அத்துடன் அந்த ஆயிரம் ரூபாவை முழுமையாகப் பெறுவதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதாவது குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு தொழிலாளர்கள் வேலைசெய்தால், குறைந்தபட்சம் எத்தனை கிலோ எடை தேயிலை கொழுந்தை அவர்கள் பறித்தால் அந்த ஆயிரம் ரூபா கிடைக்கும் என்று நிபந்தனைகள் நடைமுறையில் உள்ளன. இத்தகைய நிபந்தனைகளை விதிக்காவிட்டால் தங்களது தொழிற்துறையை இலாபகரமாக நடத்தமுடியாது என்பதே பெருந்தோட்டக் கம்பனிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

நீண்டகாலப் போராட்டத்துக்கு பிறகு தோட்டத் தொழிலாளர்கள் பெற்ற ஆயிரம் ரூபா இன்று 500 ரூபாவுக்கு சமமானதாக வந்துவிட்டது. ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் வேலை செய்தாலும் அந்த ஆயிரம் ரூபாவை வைத்துக்கொண்டு வாழ்க்கையை ஓட்டுவது சாத்தியமில்லை.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட துறையாக பெருந்தோட்டத்துறையே விளங்குகிறது. தோட்டத்தொழிலாளர் சனத்தொகையில் ஐம்பது வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள் என்று உலக வங்கியின் ஆய்வுகள் கூறுகின்றன.




இத்தகைய விரக்தியான - நம்பிக்கையிழந்த சூழ்நிலையில் தோட்டத்தொழிலாளர்களில் சிலரே நடைபவனியில் கலந்துகொள்ளக்கூடியதாக இருந்தது என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. குறைந்தபட்சம் குறிப்பிட்ட எண்ணிக்கையான நாட்கள் வேலை செய்தால் மாத்திரமே ஆயிரம் ரூபா கிடைக்கும் என்பதால் அதை இழந்து நடைபவனியில் பங்கேற்க பல தொழிலாளர்களினால் இயலாது. இரு வாரகால நடைபவனியில் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தை அடையாளபூர்வமாக பிரதிநிதித்துவம் செய்தவர்களில் பலரும் சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்களேயாவர்.

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த நடைபவனிக்கு தேசிய கிறிஸ்தவ பேரவை வேறு சிவில் சமூக அமைப்புக் களுடன் சேர்ந்து ஆதரவளித்தது.

"நாடு சுதந்திரமடைந்ததற்கு பிறகு மலையக தமிழ் மக்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு நிகராக முழுஅளவிலான குடிமக்களாக தாங்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அடங்கும். சமத்துவம், பாரபட்சமின்மை, பாதுகாப்பு, சமூகத்தின் நலன்களையும் அடையாளத்தையும் பேணிப்பாதுகாக்கக்கூடிய அரசியல் மற்றும் நிருவாக ஏற்பாடுகளை வேண்டிநிற்பதாகவே கோரிக்கைகள் இடையறாது முன்வைக்கப் பட் டுவருகின்றன. கௌரவம், சுயமரியாதை, சமா தானம் மற்றும் பாதுகாப்புடன் வாழ்வதற்கு தேவையான குரலையும் அதிகாரத்தையும் சமூகம் கொண்டிருக்கவேண் டும் என்பதற்காகவும் நுவரேலியா மாவட்டத்தில் மிக வும் செறிவாகவும் நாட்டின் ஏனைய பல பாகங்களில் சிதறியும் வாழும் இந்த மக்கள் தங்கள் அலுவல்களை தாங்களே கையாளுவதற்கு வழிவகுப்பதற்காகவுமே இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன" என்று அந்த கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.




பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உட்பட மலையக தமிழ் சமூகத்தின் தற்போதைய நிலைக்குக்கு காரணம் அவர்களின் விருப்புக்கு மாறாக பெரும் எண்ணிக்கையானோர் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்டமையும் நாடற்றவர்களாக்கப்பட்டதும் குடியுரிமை தொடர்பிலான நிச்சயமற்றதன்மை மற்றும் வாக்குரிமையின்மை ஆகியவையேயாகும். இவை அந்த சமூகத்தின் சமூக, பொருளாதார நல்வாழ்வை பெரிதும் பாதித்துவிட்டது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டு வேலைசெய்யும் மக்களே மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரிவினராவர். அவர்களே நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக உள்ளனர். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது பெரும்பாலும் மனித அபிவிருத்திக் குறிகாட்டிகள் சகலதிலும் அவர்கள் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள். இது அவர்கள் தங்களது பெருந்தோட்ட முதலாளிகளில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து ஏனைய சமூகத்தவர்களுடன் சமத்துவமான உரிமைகள் கொண்ட முழுமையான குடிமக்கள் என்ற நிலைக்கு மாறுவதை பாரதூரமாக பாதித்திருக்கிறது.

இந்த மண்ணில் வாழும் சகலரும் ஒரு தாயின் மக்கள் என்றே தேசிய கீதம் குறிப்படுகிறது. தேசிய கீதத்தின் சொற்களை நினையாப்பிரகாரம் தவறுதலாக உச்சரித்தால் கூட கடுமையான கண்டனங்கள் கிளம்புகின்றன. அவ்வாறு உச்சரிப்பவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. அந்தளவுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

# தலைமன்னார் - மாத்தளை நடைபவனியின்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த சொற்கள் மதிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு சுதந்திர தேசமாக இலங்கை பிறந்த நாளில் இருந்தே தேசிய கீதத்தின் அடிப்படை உணர்வு மீறப்படுகிறது. தேசத்தின் சிறுவர்களில் ஒரு பிரிவினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். பெரிதாக போற்றப் படும் கன்னங்கராவின் இலவசக்கல்வி கொள்கையில் வறிய தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் உள்வாங்கப்படவில்லை. 1980 வரை அவர்களின் கல்வி தோட்ட முகாமைத்துவத்தின் கைகளில் விடப்பட்டது. தொழிற்சங்கப் போராட்டத்தை தொடர்ந்தே அவர்களின் கல்விக்கான வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, நாட்டின் வேறு பாகங்களில் உள்ள பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விவாய்ப்புகள் தரங் குறைந்தவையாகவே இன்னமும் உள்ளன. ஆனால் பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ் மக்கள் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை.

பதிலாக அவர்கள் தோட்டங்களில் மிகவும் இடர்மிகு சூழ்நிலைகளில் கடுமையாக உழைக்கும் அவர்கள், சுதந்திரம் பெற்ற வேளையில் ஆசியாவின் மிகவும் சுபிட்சமிகு நாடுகளில் ஒன்றாக இலங்கையை கட்டியெழுப்பியதில் வெற்றிகண்டார்கள். அதுவே இலவச கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும் உதவியது. வெளியேறிய பிரிட்டிஷார் கிழக்கின் சுவிட்சர்லாந்தாக இலங்கை மாறும் என்று கூறினார்கள். தாங்கள் போற்றிப்பேணுகின்ற விழுமியங்களுக்கு ஏற்றமுறையில் நடந்துகொள்ளத் தவறியமைக்காக பிரிட்டிஷாரும் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும்.

அண்மைய இந்திய வம்சாவளி தமிழர்கள் குடிமக்களாக நாட்டில் வாழ்வதற்கு இருந்த உரிமையை நிராகரித்ததே சுதந்திர இலங்கையின் அரசாங்கம் 1948 ஆம் ஆண்டில் முதலில் எடுத்த தீர்மானங்களில் ஒன்று. அந்த நேரத்தில் அவர்களே நாட்டின் மிகப்பெரிய இனத்துவ சிறுபான்மைச் சனத்தொகையாக இருந்தார்கள். இலங்கைத் தமிழர்களையும் விட அவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள்.

உண்மையில் கூறுவதானால், பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் ஏனைய அடிப்படை மனித உரிமைகளையும் நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இலங்கைத் தேசத்தின் சகல பிரிவினரும் உடந்தையாக இருந்தனர். அரசியலமைப்பு அவர்களுக்கு பாதுகாப்பையோ அல்லது சட்டத்தின் ஆட்சியையயோ வழங்கவில்லை. பெரிதாகக் கூறப்படும் பிரிட்டிஷ் நீதிமுறை கூட அவர்களுக்கு நீதி வழங்கத் தவறியது.

அன்று நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இறுதியாக நாடக்கூடியதாக இருந்த மேன்முறையீட்டு நீதிமன்றமான பிரிவி கவுன்சில் சட்டத்தை நேர்மையாக பிரயோகிக்கத் தவறியது. அந்த நேரத்தில் இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இசைவாக செயற்பட்டு பிரிவி கவுன்சில் பிரச்சினையை மழுப்பி அரசியலமைப்பின் 29 வது சரத்தின் பிரயோகத்தை நிராகரித்தது.

ஒரு சமூகத்தின் மீது வேறு எந்தவொரு சமூகத்துக்கும் பிரயோகிக்கமுடியாத வசதியீனத்தை பிரயோ கிப்பதை அந்த 29 வது சரத்து தடுத்தது. சர்வதேச சட் டத்தின் பிரகாரம் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்க ளுக்கான பொறுப்பு சர்வ வியாபகமானதும் தேசிய எல் லைகளை கடந்ததுமாகும்.

மாண்புமிகு மலையக மக்களுக்கான கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறது.

அவர்களின் வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை சமூகத்தின் ஒரு பிரிவினர் என்ற வகையில் ஏனைய பிரதான சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக தனித்துவமான அடையாளத்துடன் கூடிய சமூகமாக அந்த மக்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் அவற்றில் அடங்கும்.

தற்போதைய யதார்த்த நிலைவரங்களின் பின்னணியில் நோக்கும்போது இதன் அர்த்தம் ஏனைய சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக அவர்கள் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பில் நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஆட்சிமுறையின் சகல அடுக்குகளிலும் பயனுறுதியுடைய பாத்திரத்தை அவர்கள் வகிக்கக்கூடியதாக அதிகாரம் பகிரப்படவேண்டும். ஏதோ ஒரு வடிவத்தில் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்பதேயாகும்.

மாத்தளைக்கு செல்லும் வழியில் வீதியோரங்களில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. நாவுலவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மலையக தமிழர்கள் நீதிக்கும் இழப்பீட்டுக்கும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தில் பங்கிற்கும் உரித்துடைய ஒரு சமூகத்தினர் என்ற சிந்தனை வெளிப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தங்களுக்கு தேவையானது அனுதாபமோ உதவியோ அல்ல, சமத்துவமான குடிமக்களாக அதாவது ஒரு சமூகத்துக்கு வழங்கப்படுகின்ற நன்மைகள் இன்னொரு சமூகத்துக்கு மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடியதாக உரிமைகளே தேவை என்று மலையக தமிழர்கள் சார்பில் உரையாற்றியவர்கள் வலியுறுத்தினர்.

அரசாங்கத்தின் அண்மைய முன்மொழிவுகளில் ஒன்று தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை (உண்மை ஆணைக்குழு) அமைப்பது தொடர்பிலானதாகும். அதற்காக சட்டவரைவும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உண்மை ஆணைக்குழுவின் ஆணை குறுகியதாகவே இருக்கிறது. அதாவது 1983 - 2009 காலகட்டத்தில் நாடு அனுபவித்த போரின் ஒரு பகுதியை மாத்திரம் தழுவியதாக ஆணை இருக்கிறது.

கடந்த காலத்தை வெற்றிகொண்டு ஐக்கியமாக முன்னோக்கிச் செல்வதாக இருந்தால் உண்மையைக் கண்டறியும் விடயத்தில் பரந்தளவிலான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

மலையக தமிழர்களுக்கு குடியுரிமையையும் வாக்குரிமையையும் நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் நாட்டை இறுதியில் தற்போதைய கவலைக்குரிய நிலைக்கு கொண்டுவந்த பொறுப்புக்கூறும் கடப்பாடு இல்லாத ஆட்சிமுறைக்கான களத்தை அமைத்துக்கொடுத்தது. பரந்தளவில் ஆணையைக்கொண்டதாக உண்மை ஆணைக்குழு விரிவுபடுத்தப்பட்டு தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையிலான மார்க்கத்தில் இடம்பெற்ற மரணங்களின் தடமும் உள்ளடக்கப்படவேண்டும்.

200 வருடங்களுக்கும் மேலாக அடிமைத்தொழிலாளர்கள் போன்று ஒரு சமூகம் சிறை வைக்கப்பட்டிருக்கும் நிலைவரம், 75 வருடங்களுக்கு முன்னர் அவர்களின் குடியுரிமையை பறிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், பொறுப்புக்கூறலுக்கான தேவை, இழப்பீடு, காலனித்துவ காலகட்டம் உட்பட கடந்தகாலத் தவறுகளை சீர் செய்வதற்கான நிறுவனரீதியான சீர்திருத்தங்களும் உண்மை ஆணைக்குழுவின் ஆணையில் சேர்க்கப்பட வேண்டும். ●






### மட்டக்களப்பு ஆலயங்களில்

# பக்தர்களிடமிருந்து தங்கநகைகள் அறுத்தெடுத்த 9 பெண்கள் கைது!

மட்டக்களப்பு, ஓக. 17

**மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் மற்றும் மரியாள் தேவாலயம் ஆகியவற்றின் திருவிழாக்களின்போது பெண்களின் கழுத்தில் அணியப்பட்டிருந்த பெறுமதியான நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் ஒன்பது பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

3¼ பவுண் தங்க ஆபரணங்களை அறுத்துக் கொள்ளையிட்ட பெண் கொள்ளைக் குழுவைச் சேர்ந்த 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர். எனினும், அதில் ஒரு பெண் தப்பியோடிவிட்டார்.

அத்துடன் ஆலயத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஐந்து பெண்கள் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், ஆலயத்தில் 5 பேரின் 19 பவுண் தங்கச் சங்கிலிகள் காணாமல்போயுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது என மட்டு தமையைகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரியாள் தேவாலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் இன்றாகும். நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் திருப்பலி ஒப்புகொடுத்து ஆராதனை முடிவுற்ற பின்னர் தேவாலயப் பகுதியில் தானமாக கஞ்சி வழங்கப்பட்டது.

அதனை வாங்கிக்கொண்டிருந்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த 2 அரைப் பவுண் கொண்ட தங்க சங்கிலியை 4 பேர் கொண்ட பெண் கொள்ளைக் குழுவினரைச் சேர்ந்த ஒரு பெண், அறுத் தொடுத்ததையடுத்து அவர் கள்ளன் என சத்தமிட்டுள்ளார்.

இதனையடுத்து தப்பியோட முற்பட்ட பெண் கொள்ளைக் குழுவைச் சேர்ந்த 3 பெண்களை அங்கிருந்த மக்கள் மடக்கி பிடித்தனர் இதன்போது ஒருவர் தப்பி ஓடியுள்ளார். இதனை தொடர்ந்து மடக்கிப் பிடித்த பெண் கொள்ளையர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து அவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட , 27, 33 வயதுடையவர்கள் எனவும் மூன்று பேரும் உறவினர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாமாங்கேஸ்வரர் ஆலய தேர்திருவிழாவான நேற்று முன்தினம் காலை பக்தர்கள் தேர் இழுத்து கொண்டிருந்தபோது முதிய பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த முக்கால் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்த புத்தளம் பகுதியைச் சேந்த 45 வயது பெண் ஒருவரை கைது செய்தனர்.

களுவாஞ்சிக்குடி மற்றும் அனுராதபுரம் பகுதிகளில் ஏற்கெனவே இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

## தங்கம் வென்ற மாணவிக்கு உதவி



காரைதீவு, ஓக. 17

தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று தேசிய சாதனை புரிந்த மல்வத்தை விபுலானந்தா மாணவி சிவரூபன் ஜினோதிகாவை காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வீடு தேடிச் சென்று ஐம்பதாயிரம் ரூபாய் பரிசை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

கனடாவில் வாழும் பரோபகாரி அசோகன் உபயமளித்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தை பொன்னாடை போர்த்தி அங்கு அன்பளிப்பு செய்தார்.

அத் தருணம் பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட ஆசிரியர்கள் அங்கு கலந்து சிறப்பித்தனர்.

## “புராதன இலங்கை” கண்காட்சி



கல்முனை, ஓக. 17

மாவடிப்பள்ளி அல்-அஷ்ரஃப் மகாவித்தியாலயத்தின் தரம் 6,7,8 மாணவர்களின் பங்குபற்றுதலுடன் “புராதன இலங்கை” எனும் தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சியொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை

கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் வீ.ஸம்ஸம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வரலாறு மற்றும் தகவல் தொழிநுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் பி.ரீ.எம். மஃரூப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

காரைதீவு கோட்டகல்விப் பணிப்பாளர் ரீ.டேவிட் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்ததோடு, பிரதி அதிபர் ஏ.எல். றஜாப்தீன் மற்றும் எம்.சி.எம். தஸ்தகீர் உதவி அதிபர் எஸ்.எம். அஹமட் லெவ்வை, பகுதித் தலைவர்கள் மற்றும் ஏனைய ஆசிரிய, ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக் கண்காட்சியை வரலாற்றுப் பாட ஆசிரியர்களான எஸ்.எம்.எப்.சிபாயா, எம்.எம்.எப். சிபாறா, ஜே.எம்.ரிஸ்வான் மற்றும் எம்.சமீம் ஆசிரியர்கள் இணைந்து ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

(அ)

## மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது



மட்டக்களப்பு, ஓக.17

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவசிறீ இரா. ஆதிசௌந்தரராஜ குருக்கள் தலைமையில் காலை, விநாயகர் மற்றும் கொடித்தம்ப பூஜைகள் நடைபெற்று, பஞ்சமுக விநாயகருக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வந்தார்.

தொடர்ந்து பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணிக்க அடியவர்களின் அரோகரா ஓசையுடன் ஆயிரக்கணக்கான பெண்கள், ஆண்கள் வடமிழுக்க தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த தேர்த் திருவிழாவில் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.

ஆலய பெருந்திருவிழா கடந்த 07 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் பூசைகள் சிறப்பாக நடைபெற்றன.

இராமபிரானால் வழிபட்ட ஆலயம் என்ற பெருமையையும் பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தக் கேணியைக் கொண்ட இத்தகைய சிறப்புமிக்க மாமாங்கேஸ்வரர் ஆலய ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று புதன்கிழமை நண்பகல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-ரி)

## மட்டக்களப்பில் 30,000 பேர் கடும் வறட்சியால் பாதிப்பு!

மட்டக்களப்பு, ஓக. 17

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலர் பிரிவுகளில் 8 ஆயிரத்தி 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 508 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் 2561 குடும்பங்களைச் சேர்ந்த 8805 நபர்கள் அதிக பட்சமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலக பிரிவில் 2161 குடும்பங்களைச் சேர்ந்த 6856 நபர்களும், மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 1729 குடும்பங்களைச் சேர்ந்த 6300 நபர்களும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் 1438 குடும்பங்களைச் சேர்ந்த 4341 நபர்களும், மண்முனை தென் மேற்கு பிரதேச செயலக பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2681 நபர்களும் கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 நபர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை திணைக்களத்தினால் கடந்த மே மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாதின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தினூடாக அவ்வப் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின்கீழ் பிரதேச சபை பவுசர் வண்டிகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

தேர்தல் தோல்வியை மறைக்க முயற்சி:

# ட்ரம்பை சரணடைய நீதிமன்று உத்தரவு; குற்றம் நிரூபணமானால் 20 வருட சிறை!

வாஷிங்டன், ஓக. 17

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் 2020ஆம் ஆண்டு தேர்தல் தோல்வியை மறைக்க முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அவர் உட்பட 18 பேரை சரணடையுமாறு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ர் ட்ரம்ப் மற்றும் 18 பேர்மீது ஜோர்ஜியா மாகாண தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயற்சி செய்தனர் என்று நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புல்டன் கவுண்டி மாவட்ட நீதிபதி பானி வில்லீஸ் நடத்திய இரண்டு ஆண்டுகள் விசாரணையை தொடர்ந்து இந்த குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் உள்ள அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து தனது தோல்வியை மாற்றியமைக்க ட்ரம்ப் முயற்சி செய்தார் என்று எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பானி வில்லீஸ் இந்த விசாரணையை நடத்தினார்.

அதாவது, ஜோர்ஜியாவை சேர்ந்த 16 பேரை ஒருங்கிணைத்த ட்ரம்ப், அவர்களை போலி வாக்காளர்களாக பயன்படுத்தினார். தான் வெற்றிபெற்றார் என்றும் அறிவித்துக்கொண்டார் என்பதுதான் அந்த குற்றச்சாட்டு

ட்ரம்புடன் இணை சதிகாரர்களாக அவரின் வழக்கறிஞர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ட்ரம்புக்கு எதிரான 13 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 98 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையில், அரச பதவியில் இருந்துகொண்டு சத்திய பிரமாணத்தை மீறுதல், மோசடி ஆவணங்களை தாக்கல் செய்தல், மோசடியில் ஈடுபடுதல் மற்றும் பொய்யான வாக்குறுதிகள் அளித்தல் ஆகியவற்றில் ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார்.

ஜோர்ஜியா தேர்தல் சட்டத்தில் இரண்டை அவர் அப்பட்டமாக மீறியுள்ளார். தேர்தல் தோல்வியை ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அத்துடன் சட்டவிரோதமாக சதி செய்து ட்ரம்புக்கு ஆதரவாக தேர்தல் முடிவை மாற்றியுள்ளனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், தங்கள் மீதான குற்றச்சாட்டை ட்ரம்ப் தரப்பினர் முற்றிலுமாக மறுத்துள்ளனர்.

இந்த நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதி ட்ரம்ப் மற்றும் அவருடன் குற்றம்சாட்டப்பட்டுள்ள 18 பேரும் நீதிமன்றத்தில் கண்டிப்பாக சரணடைய வேண்டுமென நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்களை ஒன்றாக விசாரிக்க அவர் திட்டமிட்டுள்ளார். விசாரணை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்ற குற்றசாட்டையும் நீதிபதி மறுத்துவிட்டார்.

இதேவேளை, ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், அதிகபட்சமாக 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று அமெரிக்க ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ)

# புகைத்தல் பழக்கம் 2030இற்குள் ஒழிப்பு

## இங்கிலாந்து அறிவிப்பு



லண்டன், ஓக. 17

2030ஆம் ஆண்டுக்குள் புகைத்தல் பழக்கத்தை ஒழிக்க இங்கிலாந்து உறுதி பூண்டுள்ளதாக அந்த நாட்டின் சுகாதார மந்திரி ஸ்டீவ் பார்க்லே கூறினார்.

இங்கிலாந்து நாட்டில் புகைப்பிடித்தல் பழக்கத்தால் உயிரிழப்போரின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. ஆண்டுக்கு சுமார் 5 இலட்சம் பேர் புற்றுநோய், மாரடைப்பு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால், தனிநபருக்கு மட்டுமின்றி அரசாங்கத்துக்கும் சுகாதார செலவுகள் அதிகரித்து வருகின்றன. எனவே இதனை குறைக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சிகரெட் பாக்கெட்டுகளில் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும், புகைத்தல் பழக்கத்தை கைவிடும் போது ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் வருகிற 2030ஆம் ஆண்டுக்குள் புகைத்தல் பழக்கத்தை முற்றிலும் ஒழிக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் ஸ்டீவ் பார்க்லே கூறினார். (ஐ)

# ரஷ்யாவின் எரிவாயு நிலைய வெடி விபத்தில் 35 பேர் பலி!



மொஸ்கோ, ஓக. 17

ரஷ்யாவின் தெற்கு பகுதியில் தாகெஸ்தான் மாகாணம் உள்ளது. இந்த மாகாணத்தில் எரிவாயு நிலையத்தில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதில், 35 பேர் உயிரிழந்ததனர். 60இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கார்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியில் தீப்பிடித்து எரிவாயு நிலையத்துக்குப் பரவியதாக கூறப்படுகிறது. (ஐ)

# உலகிலேயே அதிகம் மது அருந்தும் நாட்டினர் யார்?

லண்டன், ஓக. 17

உலகிலேயே அதிகம் மது அருந்துபவர்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் பெலாரஸ் முதலிடம் பிடித்துள்ளது.

அல்ககோல் சேஞ் யு. கே. என்ற நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த தகவல் தெரிவிக்கபட்டுள்ளது.

அந்த நாட்டில் சராசரியாக, ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 178 போத்தல்கள் மது அல்லது சுமார் 17.5 லீற்றர் மது அருந்துகின்றனர் என கூறப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ரஷ்யா, லத்வியா, லிதுவேனியா, அயர்லாந்து, மோல்டோவா, ஸ்லோவினியா, பிரித்தானியா போன்ற நாடுகளும் இடம்பெற்றுள்ளன. (ஐ)

# நீல நண்டுகளை ஒழிப்பதற்கு ரூ. 26 கோடி ஒதுக்கிய இத்தாலி!

ரோம், ஓக. 17

நண்டுகளை ஒழிக்க ஒரு நாடு 26 கோடி ரூபாயை இத்தாலி ஒதுக்கியுள்ளது. இத்தாலியில் நீல நண்டுகள் அதிவேகமாக அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் ஆகும்.

ஆரம்ப காலத்தில் இத்தாலியர்கள் ஒன்று அல்லது இரண்டு நீல நண்டுகளை மட்டுமே பார்க்க கூடியதாக இருந்த நிலைப்பாடு தற்போது மாறி, இவை படிப்படியாக அதிகரித்து நத்தைகளும் மற்ற கடல்வாழ் உயிரினங்களும் மறைந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த நண்டுகளின் அதிகரிப்பால் மட்டி, மீன் ரோகு போன்ற நீர்வாழ் உயிரினங்களும் இறந்து கொண்டிருக்கின்றன என்று இத்தாலிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தாலியர்கள் நத்தைகளை அதிகமாக விரும்பி உண்ணுகின்றனர். இந்த நீல நண்டுகள் சில கடல் அல்லாத தாவரங்கள் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களை உண்கின்றன என்று கூறப்படுகின்றது. நத்தைகளின் உணவுகளில் 90 வீதமானவற்றை இந்த நண்டுகள் உண்பதாலேயே அவற்றை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)





உலக பழங்குடிகள் தினம் கடந்த செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. ஆபிரிக்காவின் மசாய்மாரா பழங்குடி இனத்தவர் ஒருவர் பாரம்பரிய இசைக்கருவியை இசைக்கிறார்.

# மியன்மாரில் சுரங்கம் இடிந்து 31 பேர் மரணம்




யங்கூன், ஓக. 17

மியன்மாரில் சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் பலி எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

மியன்மார் நாட்டில் ஜேட் என்ற கனிம பிரித்தெடுப்பு பரவலாக நடக்கிறது. அங்குள்ள, கச்சின் மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த சுரங்கம் திடீரென இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர். 30 பேர் காணாமல் போயினர்.

இந்தநிலையில் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 8 பேரை காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தொடர்கிறது. எனினும் கடும் மழையால் மீட்பு பணி தாமதமடைந்துள்ளது. (ஐ)

## எல். பி. எல். இருபது - 20 தொடர்

# இறுதிக்கு முந்தைய சுற்றுக்குள் நுழைந்தது காலி ரைட்டன்ஸ் அணி




கொழும்பு, ஓக. 17

கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்களால் காலி ரைட்டன்ஸ் வெற்றி பெற்றது.

இதன் மூலம், கடைசி அணியாக பிளே ஓவ் சுற்றில் விளையாட அந்த அணி தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக் கர்ஸ் அணி 15.4 ஓவர்களில் 74 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது.

தப்ரெய்ஸ் ஷம்சி, லஹிரு குமார, சிக்குகே பிரசன்ன ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு கொழும்பு ஸ்ட் ரைக்கர்ஸின் துடுப்பாட்ட வீரர்களை திக்குமுக்காட வைத்தன.

பதும் நிஷங்க (2), பாபர் அஸாம் (6) ஆகிய இரண்டு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களையும் லஹிரு குமார ஆட்டமிழக்கச் செய்தார்.

தொடர்ந்து, நிபுண் தனஞ்சய (13), லஹிரு உதார (14), நுவனிது பெர்னாண்டோ (14), மொஹமத் நவாஸ் (11) ஆகிய நால்வரும் தப்ரெய்ஸ் ஷம்சியின் சுழலில் ஆட்டம் இழந்தனர்.

அடுத்த 3 விக்கெட்களை மூத்த வீரர் சீக்குகே பிரசன்ன கைப்பற்றினார். பதில் அணித் தலைவர் சாமிக கருணாரட்ன (2), ஷொரிபுல் இஸ்லாம் (0), ஜெப்றி வெண்டசே (0) ஆகியோர் பிரசன்னவின் பந்தில் வீழ்ந்தனர்.

75 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி ரைட்டன்ஸ் 8.3 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஆரம்ப வீரர் பானுக ராஜபக்ஷ 6 ஓட்டங்களுடன் இப்திகார் அஹ்மதின் பந்துவீச்சிலும் லிட்டன் தாஸ் ஒரு ஓட்டத்துடன் வெண்டர்சேயின் பந்துவீச்சிலும் ஆட்டம் இழந்தனர்.

எனினும் லசித் குரூஸ்புள்ளே, சகீப் அல் ஹசன் ஆகியோர் அதிரடியாக ஆடி 30 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் வெற்றியை உறுதிசெய்தனர்.

லசித் குரூஸ்புள்ளே 25 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 42 ஓட்டங்களையும் சகீப் அல் ஹசன் 17 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந் தனர். (ஐ)

### பிளே ஓவ் சுற்று இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 14

எல். பி. எல். ரி - 20 தொடரின் லீக் சுற்று நிறைவ டைந்துள்ளது. பிளே ஓவ் சுற்றில் ஆடவுள்ள 4 அணி களும் தெரிவாகியுள்ளன.

இதில், தம்புள்ளை ஔரா 12 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பெற்று பிளே ஓவ் சுற்றுக்குள் நுழைந்தது. காலி ரைட்டன்ஸ் 8 புள்ளிகளுடனும் பி லவ் கண்டி 8 புள்ளிகளுடனும் ஜெவ்னா கிங்ஸ் 6 புள்ளிகளுடனும் பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி பெற்றன.

பிளே ஓவ் சுற்று இன்று ஆரம்பமாகிறது. இறுதிக்கு தகுதி பெறுவதற்கான முதல் போட்டியில் தம்புள்ளை ஔரா, காலி ரைட்டன்ஸ் அணிகள் மோதுகின்றன.(ஐ)

## மகளிர் உதைபந்து உலகக் கிண்ணம்

# சுவீடன் அணியை வீழ்த்தி ஸ்பெய்ன் இறுதிக்கு தகுதி



சிட்னி, ஓக. 17

சுவீடன் அணியை 1 - 2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

பெண்களுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடு களில் நடைபெற்று வருகிறது.

இதில் ஸ்பெயின், சுவீடன் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஸ்பெயின் அணி 2-1 என்ற அடிப்படையில் சுவீடனை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறியது.

2023 மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் இறுதி போட்டிக்கு முதல் அணியாக ஸ்பெயின் தகுதி பெற்றுள்ளது. (ஐ)

# இங்கிலாந்து அணிக்கு திரும்பினார் ஸ்ரோக்ஸ்



லண்டன், ஓக. 17

நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரில் பென் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து அணிக்கு திரும்பியுள்ளார். இவர், உலகக் கிண்ணத் தொடர் வரை அணியில் ஆடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் மற்றும் இருபது -20 தொடர்களில் விளையாடவுள்ளது.

இதையொட்டி இந்த போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதில் பென் ஸ்ரோக்ஸ் இடம்பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து அணியில் இருந்து ஓய்வு பெறுவதாக பென் ஸ்ரோக்ஸ் அறிவித்தார். எனினும், உலகக் கிண்ணத் தொடரில் பென் ஸ்ரோக்ஸை விளையாட வைக்க வேண்டும் என்ற கருத்து பொதுப்படையாக நிலவி வந்தது. அணி நிர்வாகமும் இதை விரும்பியது.

இதையடுத்து, நடந்த பேச்சைத் தொடர்ந்து பென் ஸ்ரோக்ஸ் அணிக்கு திரும்பியுள்ளார்.

**இங்கிலாந்து அணி விவரம்:**

ஜோஸ் பட்லர், மொயின் அலி, கஸ் அட்கின்சன், ஜொன்னி பெயர்ஸ்ரோ, சாம் கரன், லியம் லிவிங்ஸ்ரன், டேவிட் மலான், அடில் ரஷித், ஜோ ரூட், ஜசன் றோய், பென் ஸ்ரோக்ஸ், ரீஸ் டொப்லி, டேவிட் வில்லி, மார்க் வுட் மற்றும் க்ரிஸ் வோக்ஸ். (ஐ)

# சவூதியின் அல் ஹிலால் கழகத்தில் நேற்று இணைந்தார் நெய்மர்!




ரியாட், ஓக. 17

சவூதி அரேபியாவின் அல்-ஹிலால் கழகத்தில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் உதைபந்தாட்ட நட்சத்திர வீரர் நெய்மர் நேற்று புதன்கிழமை கையெழுத்திட்டார்.

பிரேஸில் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் நெய்மர், கழக அணிகளில் பிரான்ஸின் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்காக ஆடி வருகிறார்.

அவரை சவூதி அரேபியாவின் அல் - ஹிலால் கழகம் அணியில் சேர்க்க விரும்பியது.

பாரிஸ் சென். ஜெர்மைன் அணியுடன் பேசி 2 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் நெய்மரை தனது கழகத்தில் சேர்த்துள்ளது அந்த அணி.

அவரை 9 கோடி யூரோவுக்கு பாரிஸ் அணி விற்றது. இதேசமயம், ஆண்டுக்கு 15 கோடி யூரோவை நெய்மருக்கு அல் ஹிலால் அணி வழங்கவுள்ள்ளது. (ஐ)

# ‘13’ கட்டாயமாக அமுலாகவேண்டும்

## டிலான் பெரேரா ஆதரவுக் கருத்து



**கொழும்பு, ஒக. 17**
**அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்நாடு பற்றி எரியக்கூடும் என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13ஆவது திருத்தச்சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்றுவரை அதனை நான் ஆதரித்துவருகின்றேன். வடக்கு-கிழக்கு மாகாணம் இணைந்திருந்த வேளை காணி அதிகாரம் தொடர்பில் எனக்கு கவலை இருந்தது. தற்போது அந்த கவலையும் இல்லை.

நான் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருப்பதாக கருதிவிட வேண்டாம்.

தற்போதைய சூழ்நிலையில் 13 ஐ அமுல்படுத்தாவிட்டாலோ அல்லது மாகாணசபை முறைமையை இல்லாதொழித்துவிட்டாலோ இந்நாடு பற்றி எரியும். எனவே, 13 ஐ அடிப்படையாகக்கொண்டுதான் இனப்பிரச்னைக்கு தீர்வு காண முற்படவேண்டும். இந்த முயற்சியின் போது அரசியல் 'கேம்'களுக்கு இடமளிக்கக்கூடாது-என்றார். (அ)

# ஜனாதிபதி பதவியை நான் ஏன் பொறுப்பேற்கவில்லை?

## சஜித் வழங்கியுள்ள விளக்கம்



கொழும்பு, ஒக. 17
ஜனாதிபதி பதவியைத் தான் ஏற்காதமைக்கான காரணத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகத் தெரிவித்தார்.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று முன் தினம் காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு காலி நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ தனது விளக்கத்தை வழங்கினார்.

"நான் ஏன் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை எனப் பலரும் விமர்சிக்கின்றனர். திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும், வெட்கத்தாலும்தான் ஜனாதிபதி பதவியை நான் ஏற்கவில்லை. புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன். மகா சங்கத்தினரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு கொள்கைகளை மதித்து கொள்கைசார் தூய்மையான பயணத்தை மேற்கொள்ள நான் தயார்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)

# ‘13’ இல் கை வைக்கவேண்டாம்!

## ஜனாதிபதியிடம் எஸ்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக. 17
இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய அதிகாரப்பகிர்வு விடயத்தில் தற்போது கையடிப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அதிகாரப்பகிர்வில் கை வைப்பதற்கான நேரம் அல்ல இது. வடக்கு மக்களுக்கு பாரிய சில பிரச்னைகள் உள்ளன. விவசாய நிலப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை, வீடு பிரச்னை என்பன உள்ளன. அவை தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கலாம். மாறாக இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் கையடிக்கக்கூடாது. நாட்டில் தற்போது நெருக்கடியான சூழ்நிலையே உள்ளது-என்றார். (அ)

# நாடு கடத்தப்பட்ட 54 இலங்கையர்கள்

கொழும்பு, ஒக. 17
மேலும் 54 இலங்கையர்கள் செல்லுபடியாகும் விஸா இன்றி நாட்டில் தங்கியிருந்தமைக்காக குவைத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

53 பெண்கள் மற்றும் ஒரு ஆண் அடங்கிய குழு நேற்றுக் காலை சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

குவைத்தில் இருந்து நேற்று வருகை தந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள். பொலன்னறுவை, மொனராகலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களும் இக்குழுவில் அடங்குவர்.

இவர்கள் குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக கடவுச்சீட்டில் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்ட தனிநபர்களின் குழு, தங்கள் ஆரம்பப் பணியிடங்களை விட்டு வெளியேறி, நாட்டின் விதிகளை மீறி வேறு இடங்களில் வேலையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் கோருவதற்கு முன்னர் பல்வேறு இடங்களில் தங்கியிருந்துள்ளனர்.

முந்தைய அறிவிப்பின்படி, குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சுமார் 2,000 வீட்டுப் பணியாளர்கள் நாடு திரும்புவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

# வதைக்கிறது வறட்சி!

## 15 மாவட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

கொழும்பு, ஒக. 17
பதுளை இரத்தினபுரி உட்பட நாட்டில் 15 மாவட்டங்களில் நிலவும் கடும் வறட்சியால் 54 ஆயிரத்து 984 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 83 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துவருகின்றன. தாவரங்களும் செத்துமடிகின்றன. மக்களுக்கு குடிநீரை பெறுவதிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் வறட்சியால் இரத்தினபுரி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 128 பேரும், பதுளை மாவட்டத்தில் ஆயிரத்து 324 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 63 ஆயிரத்து 136 பேரும், வடக்கு மாகாணத்தில் 75 ஆயிரத்து 287 பேரும், வடமேல் மாகாணத்தில் 17 ஆயிரத்து 73 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# கறுவா அபிவிருத்தி திணைக்களம் அமைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக. 17
கறுவா அபிவிருத்திக்கான புதிய திணைக்களம் ஒன்றை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சிறு ஏற்றுமதி பயிராக அந்நிய செலாவணியை ஈட்டுவதற்காக கறுவாப்பயிர் வழங்கிவரும் பங்களிப்பை கருத்திற்கொண்டு, அதனை வணிகப் பயிராக மேம்படுத்தவேண்டிய அவசியத்தை 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்ட யோசனையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு தேவையான வசதிகளை வழங்குதல், தரப் பண்பை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல், உற்பத்தியை பன்முகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த திணைக்களம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

கறுவா அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் குறித்த திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கான யோசனையை ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர். (அ)

# மின்சாரம் தாக்கி பெண் பலி!

கொழும்பு, ஒக. 17
ஹல்துமுல்ல, மலடோல பிரதேசத்தில் காட்டு யானைகளிடமிருந்து வயலைப் பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி பெண் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹல்துமுல்ல, மலதோல, மெதகெதரவில் வசித்து வந்த அறுபது வயதுடைய ரத்நாயக்க முதியன்சேலாகே பொடிமணிகே என்ற இரண்டு பிள்ளைகளின் தாயார்.

தனது வயலைப் பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த மின்சார கம்பியை தவறுதலாக தொட்டதில் குறித்த பெண் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# நலன்புரி கொடுப்பனவுகள் முன்பை போலவே கிடைக்கும்

கொழும்பு, ஒக. 17
சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கான கொடுப்பனவுகளை முன்பைப் போலவே வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் தமது டுவிட்டரில் இதனை கூறியுள்ளார்.

647,683 பேருக்கு முன்பைப் போன்று கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அடுத்த சில நாட்களில் பணம் செலுத்தப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி, காத்திருப்போர் பட்டியல் உட்பட 517,962 பேருக்கு முதியோர் உதவித்தொகையும், 88,602 பேருக்கு விசேட தேவையுடையோருக்கான உதவித் தொகையும், 41,119 பேருக்கு சிறுநீரக நோயாளர் உதவித்தொகையும் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

முதியோர் கொடுப்பனவு அஞ்சல் அலுவலகங்கள் ஊடாகவும் விசேட தேவையுடையோர் மற்றும் சிறுநீரக கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வழங்கப்பட வாய்ப்புள்ளது. (அ)

## சீனாவின்...

தெரிவித்துள்ளது.

ஷி யான் 6 எனும் சீன ஆய்வுக் கப்பல் நாரா நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது.

எனினும், ருஹூணு பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறித்த ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீர் மாதிரிகளை எடுப்பதற்காக தமது நிறுவனம் கப்பலுடன் தொடர்புகொள்ளும் என நாரா நிறுவனம் தெரிவித்திருந்தது.

எனினும், ஷி யான் 6 கப்பலுக்குள் பிரவேசிப்பதற்கு தமது ஆய்வாளர்கள் அனுமதி கோரிய போதிலும் நேற்று முன் தினம் பிற்பகல் வரை அனுமதி கிடைக்கவில்லை என ருஹூணு பல்கலைக்கழகத்தின் கடல்சார் தொழில்நுட்ப பீடம் தெரிவித்துள்ளது.

ஷி யான் 6 கப்பல் இலங்கை வருவது இது முதற்தடவையல்ல.

குறித்த கப்பல் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியும் இலங்கைக்கு வருகை தந்ததுடன், 10 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்தது.

கடந்த சில வருடங்களாக நாட்டிற்கு வருகை தந்துள்ள இவ்வாறான கப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்த போது, அவற்றில் பெரும்பாலானவை சீனாவை சேர்ந்த ஆய்வுக் கப்பல்களாகவே உள்ளன.

ஷி யான் 6 கப்பல் ஜூலை 6, 2023 அன்று சீனாவிலிருந்து புறப்பட்டுள்து. கடந்த செவ்வாய் பிற்பகல் நிலவரப்படி, கப்பல் வியட்நாமில் இருந்து 345 கடல் மைல் தொலைவில் தென் சீனக் கடலில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், அது சீனாவை நோக்கிய பயணப் பாதையை மாற்றி, குவாங்சூ துறைமுகத்திற்கு செல்லவுள்ளது.

இந்தக் கப்பல் இலங்கைக்கு வருகை தருவது தொடர்பில் கவனம் செலுத்தி வரும் இந்தியா, இராஜதந்திர மட்டத்தில் உரிய தரப்பினருக்கு அதனை அறிவித்துள்ளதாக அண்மையில் தெரிவித்திருந்தது. (அ)

## ரணில் களமிற...

சஜித் பிரேமதாஸ தம்பட்டம் அடிப்பதாலோ அல்லது நாமல் ராஜபக்ச மேடையில் முழங்குவதாலோ அல்லது அநுரகுமார திஸாநாயக்க போராட்டக்காரர்களைத் தூண்டுவதாலோ ரணில் விக்கிரமசிங்க என்ற பெருந்தலைவரை வீழ்த்த முடியாது.

தற்போது ஜனாதிபதி பதவியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் நாட்டுக்கான சேவையைத் திறம்படச் செய்து வருகின்றார். மூவின மக்களும் அவர் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர் அடுத்த தடவையும் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்து நாட்டு மக்களுக்கு முழு மூச்சுடன் பணியாற்றுவார்- என்றார். (அ)

## கருக்குழாய்...

இந்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, நேற்று காலை இவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து இவர் உறவினர்களால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இவர் உயிரிழந்து விட்டாரெனத் தெரிவித்தனர்.

அவரின் பிரேத பரிசோதனையை நடத்திய சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் வாசுதேவா, "பலோப்பியன் குழாயில் கரு தங்கியதால் அது வெடித்து ஏற்பட்ட இரத்தக் கசிவால் மரணம் சம்பவித்தது", என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

மரணம் தொடர்பில் மரண விசாரணை அதிகாரி ச.சிவராசா விசாரணைகளை நடத்தினார். (ரி-02)

# தமிழ் மக்களுக்குத் தேவை விடுதலையே! சீனியோ, சர்க்கரையோ தேவையற்றவை

## ரெலோ தலைமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார் விந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 17

தமிழ் மக்களின் வழிபாட்டு, வாழிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தலையை வெட்ட வாளுடன் வருவதாக மேர்வின் சில்வா கூறுகிறார். நாங்கள் மக்களுக்காக போராட வந்த இலட்சியத்தின் ஒரு துளியைக்கூட இன்னும் பெறவில்லை. மக்களின் விடுதலையே எமது கொள்கையாக இருக்க வேண்டும். சீனியோ, சர்க்கரையோ இப்பொழுது எமக்கு தேவையில்லையென காட்டமாக தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் பிரமுகர் விந்தன் கனகரட்ணம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செல்வம் அடைக்கலநாதன் கோரித்தான் வவுனியா சீனி தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் மக்களின் முன்பாக மடு தேவாலயத்தில் தெரிவித்துள்ளார்.

நான் 39 வருடங்களாக ரெலோ அமைப்பில் இருக்கிறேன். தலைவர் சிறீ சபாரட்ணம் தலைமையில் இந்த நாட்டுக்காக எனது உயிரை, உடலை, அர்ப்பணிப்பை அர்ப்பணித்து போராட புறப்பட்டிருந்தேன். பின்னர் ஜனநாயக வழியில் போராட தள்ளப்பட்டுள்ளோம். எமது போராட்ட வடிவம் மாறினாலும், எமது இலக்கு தமிழீழம் என்பதிலிருந்து மாற்றமடைந்திருந்தாலும், வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறோம்.

கைத்தொழில், மீன்பிடி, தொழிற்துறை அமைச்சராக ஜி.ஜி. பொன்னம்பலம் செயற்பட்டிருந்தார். அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்த அவர் அரசாங்கத்தில் இணைந்துவிட்டார் என தந்தை செல்வா சுயாட்சி கோரிக்கையுடன் தமிழ் அரசு கட்சியை ஆரம்பித்தார்.

ஆனால் அன்று ஜி.ஜி பொன்னம்பலம் கொண்டு வந்த சீமெந்து தொழிற்சாலை எப்படியிருக்கிறது? கந்தளாய் சீனித்தொழிற்சாலை எப்படியிருக்கிறது? சீனித்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதுடன், முழுவதும் தமிழ் மக்கள் வாழ்ந்த அந்த பகுதி சிங்கள பகுதியாகிவிட்டது. வாழைச்சேனை காகித தொழிற்சாலைக்கு என்ன நடந்தது? ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலைக்கு என்ன நடந்தது?

பரந்தன் இரசாய கூட்டுத்தாபனம் இங்குகிறதா? ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் இயங்குகிறதா? அல்லைப்பிட்டி அலுமினிய தொழிற்சாலை இயங்குகிறதா?, மண்டைதீவு மீன் தூள் ஆலை இயங்குகிறதா?

ஒரு சலுகை அடிப்படையில் அமைச்சராகினார். இப்பொழுது அனைத்து தொழிற்சாலைகளும் அழிந்து கிடக்கின்றன.

எமக்கு நிரந்தர தீர்வு கிடைக்காமல் அபிவிருத்தியென்பது நிலைத்து நிற்குமா என்ற கேள்வி அனைவரிடமும் உள்ளது.

இன்று கோயில்களை தக்க வைக்க போராடுகிறோம். குருந்தூர் மலை, வெடுக்கநாறி மலை, கன்னியா வெந்நீர் ஊற்று, தையிட்டி, பறாளாய் முருகன் கோயில், மண்டைதீவில் கடற்படை ஆக்கிரமிப்பு என பாதுகாப்பு தரப்பின் உதவியுடன் பிக்குகள் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் எமக்கு ஒரு தீர்வு வரவில்லை. என்ன கொள்கைக்காக, இலட்சியத்துக்காக புறப்பட்டோமோ அதில் ஒரு துளியை கூட அடையவில்லை. ஏற்கெனவே கொண்டு வந்த தொழிற்சாலைகள் அழிந்து, இரும்பு திருட்டு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த சூழலில் நிரந்தர தீர்வில்லாமல் அபிவிருத்தி, முதலீடு எந்த வகையில் எமக்கு சாத்தியப்படும். இப்பொழுது எமக்கு தேவை சீனியோ, சக்கரையோ அல்ல. எமக்கு தேவை விடுதலை- என்றார். (அ)

## தாயக பாடகர்...

இசைக்கலைஞர் என்பதைத் தாண்டி ஓவியராகவும் திகழந்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் இசைத்துறையில் சிறந்த ஆளுமையாளராகவும் திகழ்ந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சார்ந்து பல பாடல்களை பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஐ அகற்று...

கொண்டு வாருங்கள். அதை இந்த பாராளுமன்றம் எப்படி எதிர்கொள்கின்றது, எம்.பிக்கள் எப்படி வாக்களிப்பார்கள் என நாம் தெரிந்துகொள்ளலாம். உலகமும் தெரிந்துகொள்ளும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் சந்திக்கலாம்.

உலகம் சொல்வதைக் கேட்காமல், உலகை ஒதுக்கி வைத்து, கதவுகளை மூடி வைத்து இந்த நாட்டை நடத்திய காலம் ஒன்று இருந்தது. அதனால்தான் இன்று இந்நாடு விழுந்து போய்க் கிடக்கின்றது. ஆகவே, இப்போதும் நீங்கள் திருந்தவில்லை என உலகம் அறியட்டும்- என்றார். (அ)

## எதிர்காலத்தில்...

யாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே ஜனாதிபதி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கல்வி முறைமையில் மாற்றத்தினை ஏற்படுத்தாது நாம் எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# இலங்கைக்கு கடல் கண்காணிப்பு விமானத்தை வழங்கியது இந்தியா



கொழும்பு, ஓக. 17

77ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூரும் வகையில், இந்தியா நேற்று தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிடம், டோர்னியர்-228 என்ற கடல்சார் கண்காணிப்பு விமானத்தை உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கைக்கு கையளிக்கப்பட்ட டோர்னியர் -228 விமானம் வருடாந்த பராமரிப்புக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட நிலையில், அதற்காக மாற்று கண்காணிப்பு விமானமே இவ்வாறு இந்தியாவால் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 9, 2018 அன்று புதுடில்லியில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பாதுகாப்பு கலந்துரையாடலின் போது, இந்தியாவில் இருந்து டோர்னியர் ரகத்திற்கு இணையான கடல்சார் கண்காணிப்பு விமானங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதுடன், கடல்சார் கண்காணிப்பில் இலங்கையின் திறன்களை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்திய அரசாங்கம் இந்த ஆலோசனைகளின் போது செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்தது. இந்திய கடற்படையின் ஒரு பகுதியாக இருந்த டோர்னியர்-228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக இலங்கைக்கு வழங்க முடிவு செய்தது.

இதன் பிரகாரம் இந்த விமானத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தலைமையில் இடம்பெற்றது.

இதேவேளை, முன்னதாக வழங்கப்பட்ட டோர்னியர் -228 விமானமானது கடந்த வருடத்தில் இலங்கைக்குள் விசேட பணிகளைச் செய்வதில் முக்கிய பங்காற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

டோர்னியர்-228 கடல்சார் கண்காணிப்பு விமானம், கடல் மற்றும் கடலோர கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் வான்வெளி மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயத்தை கண்காணித்தல் மற்றும் பாதுகாத்தல், தேடல் மற்றும் மீட்பு பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் கண்காணிப்பு மற்றும் பல நடவடிக்கைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. கடல் மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்கும் இது உதவியுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# இந்திய வைத்தியர்கள் இலங்கையில் வைத்தியசாலைகள் ஆரம்பிக்க உதவி

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வாக்குறுதி

சென்னை, ஒக. 17

**இந்திய வைத்தியர்கள் இலங்கையில் வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உறுதியளித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ஆந்திர பிரதேசத்தின் விஜயவாடாவில் உள்ள வைத்திய நிறுவனமொன்றின் மருத்துவத் திட்டமொன்றை ஆரம்பித்து வைத்ததன் பின்னரே அவர் இதனை தெரிவித்துள்ளார்

ஆந்திர மாநிலத்தில் கிடைக்கும் சிறப்பான மருத்துவ வசதிகளைப் போன்று இலங்கையிலும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்காக கொழும்பு தவிர்ந்த ஏனைய நகரங்களிலும் வைத்தியசாலைகளை உருவாக்குவதற்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அதற்கான நிலத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.



இந்திய வைத்தியர்கள் இலங்கையில் வைத்தியசாலைகளை நிறுவுவதன் மூலம் இலங்கை பிரஜைகளும் பலன் பெறவேண்டும் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (அ)

## இனவாத, மதவாத கருத்துக்களை கூறி வடக்கு, கிழக்கு தமிழரை சீண்டாதீர்கள்!

கொழும்பு, ஒக. 17

இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வடக்கு, கிழக்கு தமிழர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

கொடூர போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றார்கள்.

அவர்கள் சம உரிமைகளைத்தான் கேட்கின்றார்கள். இன்னொரு போரை அவர்கள் விரும்பவில்லை.

இந்நிலையில், இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இதை நான் சொல்வதால் எனக்கு எதிராகவும் விமர்சனங்கள் வரக்கூடும். அதை நான் பொருட்படுத்த மாட்டேன் - என்றார். (அ)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழா ஏற்பாடுகள் மும்முரம்









யாழ்ப்பாணம், ஒக. 17

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்களுக்கு திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் திருவிழாக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆலயச் சூழலில் பக்தர்கள் இளைப்பாறுவதற்கான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தாக சாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய வீதியை சுற்றி சிவப்பு வெள்ளை கொடிகள் ஆலயத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன. கொடிகள் கட்டப்பட்டு எல்லைப்படுத்தப்படும் ஆலய சூழலில் வியாபார நடவடிக்கைகள், யாசகம் பெறல், விளம்பர நடவடிக்கைகள் என்பவை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்திற்கு வருவோர் அப்பிரதேசத்திற்குள் காலணிகளுடன் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ். சிறைக்குள் கைதிக்கு தொலைபேசி கொடுத்த சிறைச்சாலை அலுவலர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கைத்தொலைபேசி வழங்கிய சம்பவத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 13ஆம் திகதி உத்தியோகத்தர் காவல்கோபுர கடமையில் இருக்கும்போது கைதியான கமல் பிரியதர்ஷன என்பவரிடம் கைத்தொலைபேசியை வழங்கியுள்ளார் .

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய கைதி களுத்துறை சிறைச்சாலையில் நன்னடத்தை இல்லாத காரணத்தால் நன்னடத்தைக்காக யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர். ஹெரோயின் வழக்கில் 14 வருட தண்டனை கைதியாவர்.

சி.சி.ரி.வி கமெராக்கள் மூலம் இது கண்காணிக்கப்பட்டு சிறைச்சாலை அத்தியட்சகர் கே. வி.ஏ.உதயகுமார வின் வழிகாட்டலில் கடந்த 15ஆம் திகதி சிறைச்சாலையில் நடைபெற்ற சோதனையில் தொலைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டது.

பின்பு நடைபெற்ற விசாரணையின்போது டி.கே. எதிரிசிங்க என்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் தான் தொலைபேசி கொடுத்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (அ)

## ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 17

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 314.45 ஆகவும் விற்பனை விலை 327.82 ஆகவும் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 362.66 ஆக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை வருகிறது நாணய நிதியக்குழு

கொழும்பு, ஒக. 17

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

செப்ரெம்பர் 27 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கவுள்ள அவர்கள் பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்தவுள்ளனர்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் முதலாவது மீளாய்விற்காக குறித்த குழு வருகை தரவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் கட்ட கடன் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் கட்ட கடன் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. (அ)

## சென்னை விமான நிலையத்தில் ஏழு அடுக்கு பாதுகாப்பை மீறி நுழைந்த யாழ். இளைஞன்!

சென்னை, ஒக. 17

7 அடுக்கு பாதுகாப்பையும் மீறி விமான ரிக்கெட் இல்லாமல், சென்னை விமான நிலையத்துக்குள் சென்ற நபரை அதிகாரிகள் பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை விமான நிலையத்தில் சுதந்திர தினத்தை யொட்டி, உச்சக்கட்ட 7 அடுக்கு பாதுகாப்பு முறை அமுலில் உள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு இளைஞர் ஒருவர் விமானடிக்கெட், சிறப்பு அனுமதி பாஸ் எதுவும் இல்லாமல், விமான நிலையத்தின் பாதுகாப்புச் சோதனை, சுங்கச் சோதனை ஆகிய பகுதிகளைக் கடந்து, குடியுரிமை சோதனை நடக்கும் பகுதி வரை சென்று அங்கு சுற்றிக் கொண்டிருந்தார்.

இரவு 10 மணி அளவில் குடியுரிமை அலுவலக பகுதியில் ஊழியர் ஒருவரின் கையடக்க தொலைபேசியை திருட முயன்றுள்ளார்.

இதையடுத்து, அந்த இளைஞரைப் பிடித்து அடித்த அதிகாரிகள், விமான நிலைய மேலாளர் அறையில் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணையில், அவர் இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த தினேஷ் ஞானசூரியன் (வயது-35) என்பதும், 3 மாத விசாவில் இலங்கையிலிருந்து சென்னை வந்திருப்பதும் தெரியவந்தது. குறித்த நபரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.